# செயலாற்றுகை அறிக்கை - 2018

## அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கங்கள் |
|---|---|---|
| 1. | நிறுவனஅமைப்பு | |
| 1.1 | திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கூற்று | 2 |
| 1.2 | அறிமுகம் | 3 |
| 1.3 | திணைக்களத்தின் தொழிற்பாடுகள் | 4 |
| 1.4 | நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு | 5 |
| 2. | 2017ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை | |
| 2.1 | கண்ணோட்டம் | 6 - 7 |
| 2.2 | என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா | 7 - 21 |
| 2.3 | கம்பெரலிய | 22 |
| 2.4 | நுண் நிதி | 23-26 |
| 2.5 | விவசாயம் | 27-35 |
| 2.6 | சிறு உடமையாளர்கள் | 36-37 |
| 2.6 | உணவுப் பாதுகாப்பு | 37-41 |
| 2.7 | கால்நடைத் துறையின் அபிவிருத்தி | 41-44 |
| 2.8 | இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கான விடே வெகுமதிகள் | 44-45 |
| 3. | நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | |
| 3.1 | நிர்வாகப்பிரிவு | 46-50 |
| 3.2 | நிதி தொடர்பான தகவல்கள் | 51 |
| 3.3 | கணக்காய்வு ஆய்வு வினா | 51 |

# 1. நிறுவன அமைப்பு

## 1.1 திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கூற்று

**தூரநோக்கு**

"அபிவிருத்தி நிதிக்குத் தேவையான வசதிகள் வழங்கும் அரசின் பிரதான முகவர் நிறுவனமாக மாறுவது"

**பணிக்கூற்று**

"உரிய தரப்பினரின் ஒத்துழைப்புடன் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்திக்குத் தேவையான நிதி வளங்களை ஏற்படுத்துதல், ஆரம்ப முயற்சியாண்மைப் பிரிவுக்கான மூலதன ஈட்டம் மற்றும் அதற்குரிய கொள்கை வியூகங்களை வகுத்தல் மற்றும் அவற்றுக்கான வசதியளித்தல்"

## 1.2 அறிமுகம்

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் நுண்நிதித்துறையை முன்னேற்றுவதை நோக்காகக்கொண்டு 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. திணைக்களம் பதவிநிலை உத்தியோகத்தர் 13 உள்ளடங்கலாக மொத்தமாக 34 ஆளணியினரைக் கொண்டுள்ளது. திணைக்களத்தின் பிரதான பணிகள் நான்கு பிரிவுகளின் கீழ் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

### 1.2.1. ஆரம்பப்பிரிவு அபிவிருத்தி

அரசின் அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஆரம்பத்துறை பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வளர்ந்துவரும் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைகளை தயாரித்தல்

### 1.2.2. நுண்நிதித்துறை அபிவிருத்திப்பிரிவு

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையான நிதியீட்டம் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கிராமிய மட்டத்தில் வணிக வங்கிகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நிதியானது நடுத்தர வருமானம் பெறும் குடும்பத்தினரது வருவாயை உயர்த்தவும் குறைவருமானம் பெறும் குடும்பத்தினரது நுகர்வுச் செலவுக்குதவவும் அவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் அனைத்து பிரசைகளினதும் நுகர்வை அதிகரிப்பதற்கும் பெண்களின் சமூக, பொருளாதார மட்டங்களை அதிகரிப்பதற்கும் பேருதவி புரிகிறது.

### 1.2.3. சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்திப்பிரிவு

இலங்கை அரசின் ஒட்டு மொத்த கொள்கைச் சட்டகத்தினுள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப்பிரிவு, பிரதான வியூகப்பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏனெனில் அதனூடாக பொருளாதார அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, மற்றும் வறுமையொழிப்பு என்பன ஏற்படுவதனாலாகும். அவை தெளிவாக இலங்கைப் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் பிரிவின் ஊடாக இலங்கையின் மொத்த முயற்சியாண்மைகளில் 75% மும், வேலைவாய்ப்பில் 45% மும், மொத்தத்தேசிய உற்பத்தியில் 52% மும் பங்களிப்புச் செய்வதனாலாகும்.

### 1.2.4. அபிவிருத்தி நிதி பற்றிய வியூகத்திட்டமிடல் பிரிவு

மேலதிக அறுவடை முகாமைத்துவம் செய்யப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு விவசாயிகள் ஏனைய சந்தைக் காரணிகளின்பால் கவனத்தைச் செலுத்தி கேள்வி நிரம்பல் காரணிகளில் சமநிலையை ஏற்படுத்துதல். தேசிய பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கு பெறுமதியான பங்களிப்பைச் செலுத்தி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையினரை ஊக்குவித்து புதிய முயற்சியாளர்களை அடையாளங் காண்பதை நோக்காகக் கொண்டு திணைக்களத்தின் பங்களிப்புடன் சலுகைக்கடன்கள், திறைசேரிப் பிணை, மற்றும் தொழிநுட்ப உதவி உட்பட அரசின் பல்வேறு சலுகைகளை வழங்குதலானது மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.3 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சியாண்மைப் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தேவையான கொள்கை தந்திரோபாயங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்குதலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்

- சந்தைத் தரவுகளை ஆய்வு செய்து சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்காக திறமையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது.

- பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களின் முன்னேற்ற ஆய்வு மற்றும் அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலுக்கான வசதிகளை வழங்குதல்

- சந்தைத் தேவைகளுக்கேற்ப வங்கி காப்புறுதி சிறிய மற்றும் நடுத்தர முயற்சி யாண்மைகள் மற்றும் நிதி முயற்சியாண்மைப் பிரிவு நிதிப்பிரிவுகளுக்கான சட்டங்களை உருவாக்குதலும் அவற்றிற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும்

- சிறிய மற்றும் நடுத்தர விவசாய முயற்சிப்பிரிவு வங்கி பணச்சந்தை மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்


- சிறிய மற்றும் நடுத்தர நிதித்துறை முயற்சியாண்மைப் பிரிவு ஆரம்ப விவசாயப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைக்கிடுதல்

- சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையுடன் தொடர்புடைய விவசாய தொழில்நுட்ப மற்றும் சேவைத்துறை தொடர்பான புள்ளி விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்வுசெய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைப்பது.

- அரச ஆதரவில் அமுல்படுத்தப்படும் வெளிநாட்டு சலுகைத் திட்டங்களைக் கண்டறிவது.

- அரச கொள்கைகளுக்கிணங்க சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைப் பிரிவின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்களுக்காக தேசிய வங்கி மற்றும் நிதி வசதிகளை வழங்குதல்.

## 1.4 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபு




பி.ப. - பிரதிப் பணிப்பாளர்
உ.ப. - உதவிப் பணிப்பாளர்
த.உத். - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அ.உ. - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.உ. - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர்
பொ.மு. - பொது முகாமைத்துவ உதவியாளர்
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்
சா. - சாரதி
கா.உ. - காரியாலய தொழில் உதவியாளர்

## 2. 2018ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

### 2.1 கண்ணோட்டம்

பொருளாதார அபிவிருத்தியில் அபிவிருத்தி நிதி முக்கிய பங்குவகிக்கிறது. பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் அவ்வாறே சமூக நலனோம்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றில் அபிவிருத்தி நிதியின் நடத்தையானது மிக ஆழமாகக் கலந்துள்ளது. சந்தைப் பொருளாதார முறைமையில், அதனை வெற்றிகரமானதொரு முறைமையாக மாற்றுவதற்காக தனியார்த்துறை முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளதோடு பேரண்டப் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக நாட்டிலுள்ள நிதி அமைப்பிற்கான வழிகாட்டல்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இச்சூழ்நிலையில், சாதாரண வட்டி விகிதத்தில் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல், நிதியளிப்பு நிறுவனங்களினால் வேண்டப்பட்ட கடன் பிணை உத்தரவாதங்களை சமர்ப்பித்தல், தொழில்நுட்ட அறிவின்மை மற்றும் தமது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பின்மை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற தொழில்முயற்சியாளர்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் போன்ற இந்நாட்டின் பொருளாதாரத்தல் செயலாதிக்கம் பெற்றுள்ள அனைத்து செயலுக்கமிக்க குழுக்களுக்கும் அரசாங்கம் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது. ஆதலால், நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னர் அதிகாரத்திற்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் அத்தகைய அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரே தடவையில் தீர்த்துவைப்பதற்கான விரிவான தீர்வுத்திட்டமொன்றினை அமுல்படுத்தாது அவற்றினைத் தனித்தனியாக தீர்த்துவைப்பதற்காக காலத்திற்குக் காலம் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தின.

அதன்பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறை, நுண் தொழில்முயற்சிகள், சுய- தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இளம் தொழில் முயற்சியாளர்கள் போன்ற நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தியான இத்துறைகளை பலப்படுத்துவதன் மூலமும் வலுவூட்டுவதன் மூலமும் தலா வருமானத்தினை ஐ.அ.டொ. 5,000 வரையில் அதிகரித்தல், ஒரு மில்லியன் புதிய தொழில்களை உருவாக்கல், ஏற்றுமதிகளை இரட்டிப்பாக்கல் மற்றும் 5 சதவீதத்திற்கும் அதிகமாக மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சியினைத் தொடருதல் போன்ற நாட்டின் நடுத்தரக் கால இலக்குகளோடு இணைந்த வகையில் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பன செயற்படுத்தப்பட்டதோடு மாத்திரமன்றி அரசாங்கம் “என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

### 2.2 என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

இலங்கையில் தற்போது ஏறத்தாழ 230,000 தொழில் வழங்குநர்கள் அல்லது தொழில் முயற்சியாளர்கள் உள்ளனர். இது மொத்த ஊழியப் படையில் ஏறக்குறைய 2.8 சதவீதத்தினைப் பிரதிபலிக்கிறது. வியட்நாம் மற்றும் தாய்லாந்து போன்ற தற்போது துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தொழில்முயற்சியாளர்களின் குறிகாட்டியானது முறையே 19.6 சதவீதம் மற்றும் 27.5 சதவீதம் என உயர்ந்த விகிதத்தில் காணப்படுகிறது. என்றாலும், அதிக சனத்தொகை அடர்த்தியினைக் கொண்ட வங்காளதேசம் மற்றும் சீனா போன்ற நாடுகளில் இக்குறிகாட்டியானது முறையே 11.6 சதவீதம் மற்றும் 7.5 சதவீதம் எனக் காணப்படுகையில், இலங்கையின் சனத்தொகை அடர்த்தியினை ஒத்த பல நாடுகளில் இது 10 சதவீதத்தில் நிலையாகப் பேணப்படுகின்றது.

இதற்கமைய, பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டு இலங்கையில் தொழில்முயற்சியாளர்களின் குறிகாட்டியினை அதிகரிக்கும் நோக்கில் தற்போதைய அரசாங்கத்தினால் “என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 100,000 புதிய தொழில்முயற்சியாளர்களைத் தோற்றுவிப்பதற்கும் ஏற்கனவே தொழில்முயற்சியொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தமது தொழில்முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமொன்றினை நோக்கி இலங்கையினைக் கொண்டு செல்வதற்காக பலமான தொழில்முயற்சியாளர்களைத் தோற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் நிதி மற்றும் நிதியல்லாத வசதிகளை வழங்குவதற்காக பதினேழு (17) வட்டி மானியக் கடன் திட்டங்கள், மூன்று (03) நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட மீள்நிதியளிப்புக் கடன் திட்டங்கள் மற்றும் இரண்டு (02) நிதியல்லாத ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மானிய வீதம், வட்டி வீதம், பயனாளிகள், அதிகபட்ச கடன் தொகை போன்ற கடன் திட்டத்துடன் தொடர்பான விபரங்கள் கட்டம் 12.1 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

**விசேட குறிப்பு 2.1 : “என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்**

| கட்டம் 12.1 “என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | | |
|---|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் | |
| **1. வட்டி மானிய கடன் திட்டம்** | | |
| 1.1 ரன் அஸ்வென்ன | **<u>வகை – I</u>** | |
| | பயனாளிகள் | - சிறிய அளவிலான விவசாயிகள், கமநல நிறுவனங்கள், அலங்கார மலர்களைப் பயிரிடுவோர், அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் ஈடுபடும் வியாபாரங்கள் |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - 5,000,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| | மானிய வட்டி வீதம் | - 50% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - 6.93% |
| | மீள் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக) |
| | **<u>வகை – II</u>** | |
| | பயனாளிகள் | - விவசாய மற்றும் மீன் பதனிடும் தொழில், சகல வசதிகளுடன் கூடிய பல்தின மீன்பிடி படகுகள் மற்றும் ஏனைய உபகரணங்கள், சுற்றுலா தொழில் தொடர்பான உபகரணங்கள். |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - 300,000,000 |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக)<br>**<u>வகை – III</u>**<br>பயனாளிகள் - வர்த்தக ரீதியான விவசாயக் கம்பனிகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 750,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக) |
| 1.2 கொவி நவோதா | பயனாளிகள் - சிறிய அளவிலான விவசாயிகள், விவசாய நிறுவனங்கள், (விவசாய நடவடிக்கை இயந்திர மயமாக்கல்)<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 500,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 75%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 3.46%<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக) |
| 1.3 ரிய சக்தி | பயனாளிகள் - பாடசாலை போக்குவரத்துச் சேவை வழங்கும் வாகன வாகன உரிமையாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 4,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி விதம் - 75%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 3.46%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் |
| 1.4 'சிட்டி ரைட்' கடன் திட்டம் | பயனாளிகள் - தற்போது பாவனையிலிருக்கும் பழைய பேரூந்துக்கு பதிலாக சொகுசு பேரூந்து/ தாழ்த் தள தனியார் பேரூந்து ஒன்றை கொள்வனவு செய்வதற்கு விருப்பமுள்ள தனியார் பேரூந்து உரிமையாளர்கள்.<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 10,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி விதம் - 75%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 3.46%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக) |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| | |
| 1.5 'மினி டெக்சி / மின் சக்தியில் இயங்ககுின்ற முச்சகர வண்டியினை' கடன் திட்டம் | பயனாளிகள் - 35 வயது அல்லது அதற்கு கூடிய வயதையுடைய வாடகை நோக்க முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் வாடகைக் கார் சேவையை வழங்குவதற்கு சிறிய ரக மோட்டார் / மின் சக்தியில் இயங்ககுின்ற முச்சகர வண்டியினை கொள்வனவு செய்தல்.<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 2,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி விதம் - 75%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 3.46%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் |
| 1.6 ரிவி பல சவி | பயனாளிகள் - சூரிய மின் களங்களை பொருத்துவதற்கு எதிர்பார்த்திருக்கும் வீட்டு உரிமையாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 350,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் |
| 1.7 திரி சவிய | **<u>வகை – I</u>**<br>பயனாளிகள் - கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள்,<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 50,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 0%<br>மீள் செலுத்தும் காலம் - 4 வருடங்கள் (3 மாத சலுகைக்காலம் உள்ளடங்கலாக)<br><br>**<u>வகை – II</u>**<br>பயனாளிகள் - சுய தொழில் முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93 %<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக)<br><br>**<u>வகை – III</u>**<br>பயனாளிகள் - கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் தொழில்முயற்சியாளர்கள்.<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 5,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93 % |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | | | |
|---|---|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் | | |
| | மீள் செலுத்தும் காலம் | - | 7 வருடங்கள் (ஒரு வருட சலுகைக்காலம் உள்ளடங்கலாக) |
| 1.8 ஜய இசுர | **<u>வகை – I</u>** | | |
| | பயனாளிகள் | - | வருடாந்த விற்பனை ரூபா. 10 மில்லியனுக்கும், ரூபா. 250 மில்லியனுக்கும் இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 5 இற்கும் 50 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத்துறை, கடற்றொழில், அலங்கார மீன் வளர்ப்பு, கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மற்றும் இலகு பொறியியல், அச்சிடல், சுற்றுலா, கைவினைப் பொருட்கள், பலகை உற்பத்திப் பொருட்கள், ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், உற்பத்திக் கைத்தொழில் மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள் |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | -<br>- | 100,000,000 (ஏற்றுமதி)<br>50,000,000 (ஏற்றுமதியல்லாத) |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - | 13.86% |
| | மானிய வட்டி வீதம் | - | 50% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - | 6.93% |
| | மீள் செலுத்தும் காலம் | - | 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| | **<u>வகை – II</u>** | | |
| | பயனாளிகள் | - | வருடாந்த விற்பனை ரூபா. 250 - ரூபா. 750 மில்லியனுக்கு இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 51 இற்கும் 300 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத்துறை, கடற்றொழில், அலங்கார மீன்வளர்ப்பு, கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மற்றும் இலகு பொறியியல், அச்சிடல், சுற்றுலா கைவினைப் பொருட்கள், பலகை உற்பத்திப் பொருட்கள், ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், மற்றும் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - | 400,000,000 (ஏற்றுமதி)<br>200,000,000 (ஏற்றுமதியல்லாத) |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - | 13.86% |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| | மானிய வட்டி வீதம் - 25%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 10.40%<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.9 சொந்துரு பியச | பயனாளிகள் - 1,500 சதுர அடிக்குக் குறைந்த வீட்டுரிமையாளர்கள் வீட்டை விரிவுபடுத்த அல்லது நிர்மானத்தை பூரணப் படுத்துவதற்கு.<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா) - 200,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் |
| 1.10 மாத்ய அருண | **<u>வகை – I (ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு)</u>**<br>பயனாளிகள் - பதிவு செய்த ஊடகவியலாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 300,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 0%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக)<br><br>**<u>வகை – II (ஊடக உபகரணங்களை புதுப்பிப்பதற்கு)</u>**<br>பயனாளிகள் - பதிவு செய்த ஊடகவியலாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 150,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 5 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.11 'எனது எதிர்காலம்' கடன் திட்டம் | பயனாளிகள் - உயர்தரம் சித்தியடைந்த மாணவர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,00,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 0%<br>மீள் செலுத்தும் காலம் - 12 வருடங்கள் |
| 1.12 'எரம்பும' கடன் திட்டம் | பயனாளிகள் - இளம் பட்டதாரிகள் மற்றும் தேசிய தொழில் திறன் தகைமை (NVQ) 5, 6, 7 தர சான்றிதழ்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,500,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 12%<br>மானிய வட்டி வீதம் - 100%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 0%<br>ஏனைய வசதிகள் - அரசாங்கத்தின் முழுப் பொறுப்பு |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| | மீள் செலுத்தும் காலம் - 7 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.13 பசுமைக் கடன் | **<u>வகை – I</u>**<br>பயனாளிகள் - உக்கிப்போகக் கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொதியிடும் பொருட்களை உற்பத்தி செய்வோர், சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் சேதன பசளை உற்பத்தியாளர்கள்.<br>*முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் (முச்சக்கர வண்டிகளில் மீட்டர் பொருத்துவதற்காக அதிகபட்ச தொகை 20,000)<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 1,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50%<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.93%<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக)<br><br>**<u>வகை – II</u>** - **<u>"ஹோம்ஸ்டே" (Homestay) நிகழ்ச்சித்திட்டம்</u>**<br>பயனாளிகள் - சுற்றுலா பயணிகளுக்கு வீடுகளில் தங்குமிட வசதி வழங்கும் அல்லது வழங்க விரும்புவோர். எதிர்பார்த்திருப்போர்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 5,000,000<br>வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- 13.86%<br>மானிய வட்டி வீதம் - 50% விட அதிகமான<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6%<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.14 'ஹோம் ஸ்வீட் ஹோம்' கடன் திட்டம் | பயனாளிகள் - அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதல் தடவையாக வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு/ கட்டுவதற்கு<br>* தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை அல்லது வேறு நபர்கள் வீடமைப்பு நிறுவனங்களின் திட்டத்தில் முதல் முறையாக வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | | |
|---|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் | |
| | | * தனியார் வீடமைப்பாளர்களிடமிருந்து வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு<br>* முதல் தடவையாக வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு<br>* தமது வதிவிடத்திற்காக முதல் முறை வீடொன்றை அமைப்பதற்கு |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - | 10,000,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- | 12% (முதல் 5 வருடங்களுக்கு) |
| | மானிய வட்டி வீதம் - | 40% (முதல் 5 வருடங்களுக்கு) |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - 7%<br>(மானியம் வழங்கப்படுவது முதல் 5 வருடங்களுக்கு மட்டும்) |
| | மீள் செலுத்தும் காலம் - | 25 வருடங்கள் |
| 1.15<br>'ரெக்கவரன' கடன் திட்டம் | **<u>வகை – II</u>**<br>பயனாளிகள் | - சிறுவர் நாளாந்த பராமரிப்பு பாதுகாப்பு நிலையங்களை நடாத்துவதற்கு தகைமையுடைய தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழைக் உடைய ஆளணியினரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மகளிர் சிறுவர் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட சிறுவர் நாளாந்த பாதுகாப்பு நிலையத்திற்கான தேசிய வழிகாட்டலுக்கமைவாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - | நிலையமொன்றுக்கு 3,500,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம்- | 13.86% |
| | மானிய வட்டி வீதம் - | 75% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - | 3.46% |
| | மீள் செலுத்தும் காலம் - | 7 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| | **<u>வகை – II</u>**<br>பயனாளிகள் - | முதியோர் காப்பகங்களை புதிதாக நிர்மாணிப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு விருப்பமுள்ள தனியார் தொழில் முயற்சியாளர்கள் (தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழை உடைய (NVQ) ஆளணியினரைக் |

**கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்:**

| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் | | |
|---|---|---|---|
| | | | கொண்டிருப்பதோடு முதியோர் காப்பக நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலங்கை தர நியமம் (SLS) 1506:2015 க்கு அமைய நடாத்துதல் வேண்டும்.) |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - | 10,000,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - | 13.86% |
| | மானிய வட்டி வீதம் | - | 75% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - | 3.46% |
| | மீள் செலுத்தும் காலம் | - | 7 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.16 'சிங்கித்தி பாசல' கடன் திட்டம் | பயனாளிகள் | - | புதிதாக சிறுவர் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அல்லது தற்போது இயங்கும் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு விருப்பமுள்ளவர்கள் தகைமையுடைய ஆளணியினரை சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - | 2,000,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - | 13.86% |
| | மானிய வட்டி வீதம் | - | 50% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - | 6.93% |
| | மீள் செலுத்தும் காலம் | - | 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 1.17 'சிஹின மாளிகா' கடன் திட்டம் | பயனாளிகள் | - | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த வெளிநாட்டு பணி புரிவோர் கடன் பெறுவதற்கு தகைமை பெறுவதற்கு உரிய வெளிநாட்டு வேலை புரிநர் மாதாந்தம் குறிப்பிடத்தக்களவு தொகையினை இலங்கையில் இயங்கிவரும் ஏதேனுமொரு வங்கி மூலம் பணம் அனுப்புதல். பின்வரும் நோக்கங்களுக்கு கடன் வழங்கப்படும்.<br>*புதிய வீடொன்றினைக் கட்டுதல்<br>* வீடொன்றினைப் புதுப்பித்தல்<br>* வீட்டினை உடைத்து புதிய வீடொன்றினைக் கட்டுதல்.<br>* புதிய வீடொன்றினைக் கொள்வனவு செய்தல்<br>*காணி கொள்வனவு செய்து வீடொன்றினைக் கட்டுதல்.<br>*வீட்டினைக் கொள்வனவுசெய்து புதுப்பித்தல் |
| | அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) | - | 10,000,000 |
| | வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - | 13.86% |
| | மானிய வட்டி வீதம் | - | 75% |
| | கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி | - | 3.46% |
| | மீள் செலுத்தும் காலம் | - | 15 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| கடன் திட்டத்தின் பெயர் | விபரம் |
| | |
| **2 வெளிநாட்டுக் கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கடன் நிகழ்ச்சித் திட்டங்கள்** | |
| 2.1 கூரையின் மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தி கருத்திட்டம் RSPGLoC | **வகை – I**<br>பயனாளிகள் - தனியார் வீட்டு உரிமையாளர்கள்<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 8%<br>அதிகபட்ச கொள்ளளவு - 50 கிலோ வோட்<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள்<br><br>**வகை – II**<br>பயனாளிகள் - தொழில் முயற்சியாளர்கள்<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 8%<br>அதிகபட்ச கொள்ளளவு - 50 கிலோ வோட்<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (முதலாவது தடவைக்கான 50 மில்லியன் மற்றும் முன்னேற்றச் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு 200 மில்லியன் வரை அதிகரித்தல்.)<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள் (6 மாத சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடன் திட்டம் (SMELoC) | பயனாளிகள் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 50,000,000<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 11 – 14%<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 175 மில்லியன்)<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| 2.3 "பவித்ர கங்கா" | பயனாளிகள் - ஏற்கனவே களனி கங்கைக்கும், களப்புகளுக்கும் தமது கழிவுப்பொருட்களை வெளியேற்றும் கம்பனிகள்<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - 30,000,000<br>கடன்பட்டோர் செலுத்த வேண்டிய வட்டி - 6.5%<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்<br>மீள் செலுத்தும் காலம் - 10 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| **3 நிதி மற்றும் நிதியல்லாத உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்** | |
| 3.1 தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI) | பயனாளிகள் - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்.<br>அதிக பட்ச கடன் தொகை (ரூபா.) - மொத்தக் கடன் தொகையில் 1/3<br>வருடாந்த தவணை - 1 - 2 %<br>வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 100 மில்லியன்) |
| 3.2 சிறிய அளவிலான நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கான ஆதரவை வழங்கல் | பயனாளிகள் - இளைஞர், யுவதிகள், பெண்கள், விவசாயிகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கம்பனிகளை ஸ்தாபிப்பதற்கு அக்கறை செலுத்தும் நபர்கள்<br>நிதியல்லாத நன்மைகள் - கம்பனிகளை பதிவுசெய்தல், கணக்கேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல், நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல், சந்தைக்குள் பிரவேசித்தல் என்பவற்றுக்கான தொழில்நுட்ப உதவி.<br><br>நிதிசார் நன்மைகள் - அரச வங்கிகளின் ஊடாக கடன் வசதிகள் மற்றும் 75 |

| கட்டம் 12.1 "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிதி மற்றும் நிதியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்: | |
|---|---|
| **கடன் திட்டத்தின் பெயர்** | **விபரம்** |
| | சதவீத கடன் தவணைக் கொடுப்பனவு அரசாங்கத்தினால் செலுத்தப்படும்.<br><br>**<u>அரசாங்கத்தின் மானியம்</u>**<br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் - கடன் தவணை மற்றும் மாதாந்த வட்டி உள்ளடங்கலாக மாதாந்த தவணையில் 75%<br>பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் - கடன் தவணை மற்றும் மாதாந்த வட்டி உள்ளடங்கலாக மாதாந்த தவணையில் 85%<br>அங்கவீனமுற்றவர்களால் நடாத்தி செல்லப்படும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் - கடன் தவணை மற்றும் மாதாந்த வட்டி உள்ளடங்கலாக மாதாந்த தவணையில் 90% |

### 2.2.1 வட்டி மானிய கடன் திட்டங்கள்

அரச மற்றும் தனியார்த் துறை வங்கிகளில் வட்டி மானியக் கடன் திட்டங்கள் அவற்றின் சுய நிதிகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டதோடு அவற்றிற்கான வட்டிக் கூறானது அரசாங்கத்தினால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்படுகிறது. இருபத்தி இரண்டு (22) வட்டி மானிய கடன் திட்டங்களில் எட்டு (08) கடன் திட்டங்கள் 2017 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஏனையவைகள் 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே, இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நாட்டில் விவசாயம், கடற்றொழில், அலங்கார மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மென் பொறியியல், அச்சடித்தல், சுற்றுலாத்துறை, கைவினைப் பொருட்கள், மரப் பெருட்கள், ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், உற்பத்திக் கைத்தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், பெண் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சுய தொழிலாளர்கள் உள்ளடங்கலாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோரை இலக்காகக் கொண்டும் மேற்குறித்த துறைகளை மேம்படுத்துவதற்கும் உதவுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 27,850 பயனாளிகளுக்கு மத்தியில் ரூபா 54,320 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 : 2019 மார்ச் 31 ஆம் திகதியில் வட்டி மானிய நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள்**

| தொடர் இல | கடன் திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| 1 | சொந்துரு பியச | 11,831 | 2,352 |
| 2 | கொவி நவோதா | 2,282 | 1,744 |
| 3 | ரன் அஸ்வென்ன | 8,824 | 10,048 |
| 4 | ரிய சக்தி | 802 | 2,372 |
| 5 | ரிவி பல சவி | 1,070 | 355 |
| 6 | ஜய இசுர | 2,200 | 36,815 |
| 7 | மாத்ய அருண | 595 | 226 |
| 8 | பசுமைக் கடன் | 174 | 298 |
| 9 | எரம்பும | 58 | 79 |
| 10 | நடுத்தர வருமானமுடையோருக்கான வீட்டுக் கடன் | 14 | 31 |
| | **மொத்தம்** | **27,850** | **54,320** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

தற்பொழுது பயன்பாட்டிலுள்ள கடன் திட்டங்களின் பரப்பெல்லையினுள் உள்வாங்கப்படாத பகுதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் "சிட்டி ரைட்", "மின் ரெக்ஸி", "சிஹின மாளிகாவ", "ரெகவரண" மற்றும் "சிங்கித்தி பாசல" போன்ற ஐந்து புதிய மானியக் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, கோழி உற்பத்தியாளர்களுக்கு

ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட "திரிசவிய" கடன் திட்டமானது சிறியளவிலான கால்நடை உற்பத்தியாளர்கள் மற்றும் சுய தொழிலாளர்களை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், இளம் பட்டதாரிகள் வியாபாரமொன்றினைத் தாபிப்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பூச்சிய வட்டி விகித கடன் உத்தரவாதத்துடன் கடனொன்றினை வழங்குவதற்காக அரசாங்கம் "எரம்புமு" என்ற பெயரில் கடன் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய தொழிற்றகமைச் சான்றிதழின் (NVQ) 5,6 மற்றும் 7 மட்டங்களைப் பூர்த்தி செய்துள்ள சான்றிதழ்தாரிகளும் இக்கடன் திட்டத்தின் மூலம் பயனடையும் வகையில் அரசாங்கம் இத்திட்டத்தினை 2018 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தியுள்ளது.

இத்தகைய மானியக் கடன் திட்டங்களின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கு கடன் மானியங்களை வழங்குவதற்காக அரசாங்கம் ரூபா 6,200 மில்லியனினை ஒதுக்கியுள்ளதோடு, ஒதுக்கப்பட்ட மொத்த தொகையினை பங்கேற்பு நிதி நிறுவனங்கள் முறையாகப் பயன்படுத்துமாயின் 2019 ஆம் ஆண்டில் ஏறத்தாள ரூபா 76,00 மில்லியன் பெறுமதியான கடன்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடும் காணப்படுகின்றது.

**அட்டவணை 2.2 : வட்டி மானியக் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கக் கூடிய இயலளவு - 2019**

| தொடர் இலக்கம் | கடன் திட்டம் | 2019 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்தொகை (ரூபா. மில்லியன்.) | 2019 ஆண்டில் வழங்கக் கூடிய கடன்களின் உச்சப் பெறுமதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| 1 | சொந்துரு பியச | 1,000 | 14,430 |
| 2 | கொவி நவோதா | 50 | 481 |
| 3 | ரன் அஸ்வென்ன | 900 | 12,837 |
| 4 | ரிய சக்தி | 500 | 4,807 |
| 5 | ரிவி பல சவி | 100 | 1,443 |
| 6 | ஜய இசுர | 3,000 | 34,482 |
| 7 | திரி சவிய | 5 | 72 |
| 8 | மாத்ய அருண | 25 | 240 |
| 9 | பசுமைக் கடன் | 20 | 270 |
| 10 | எரம்புமு | 50 | 416 |
| 11 | ஹோம் ஸ்வீட் ஹோம் | 250 | 5,000 |
| 12 | எனது எதிர்காலம் | 200 | 1,538 |
| 11 | சி.ம.ந. கம்பனிகளின் உருவாக்கம் | 100 | 125 |
| | **தொகை** | **6,200** | **76,141** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

## 2.2.2 நன்கொடையார்கள் மூலம் நிதியளிக்கப்பட்ட மீள்நிதிக் கடன் திட்டங்கள்

"என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வருகின்ற மூன்று கொடை வழங்குநர் நிதியளிக்கப்பட்ட கடன் திட்டங்களாவன, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடன் திட்டம், கூரை சூரிய சக்தி மின்னுற்பத்திக் கடன் கருத்திட்டம் மற்றும் இலத்திரனியல் நட்பு கடன் திட்டம் (பவித்ர இஇஇஇஇஅடிஎ கங்கா) என்பனவாகும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கருத்திட்டத்தின் 100 மில்லியன் ஐ.அ.டொ. கடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்டதுடன் 2018 ஒக்டோபரில் நிறைவு செய்யப்பட்டு 2019 சனவரியில் நிதியியல் ரீதியாக நிறைவு செய்யப்பட்டது. ஆரம்ப ஐ.அ.டொ. 100 மில்லியன் பயன்பாட்டின் திருப்திகரமான செயலாற்றுகையினை கவனத்திற்கொண்டு சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடனுக்கான கேள்வி அதிகரித்ததனால் 75 மில்லியன் ஐ.அ.டொ. மேலதிகக் கொடுப்பனவு 1 என்ற வகையில் ஆ.அ.வங்கியினால் வழங்கப்பட்டதுடன் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்துடன் ஶ-பெண் தொழில் முயற்சியாளர் நிதி முன்னெடுப்பு மானியமாக 9.5 மில்லியன் ஐ.அ.டொ. வழங்கப்பட்டது. இந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான ஐ.அ.டொ. 9.5 மில்லியன் கடன் ஏற்பாட்டின் மூலம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது 75 மில்லியன் ஐ.அ.டொ. மேலதிகக் கொடுப்பனவில் இரண்டு கட்டங்கள் (ஒவ்வொன்றும் 225 மில்லியன் ஐ.அ.டொ.) 2018 மார்ச் மற்றும் 2018 செப்டெம்பரில் முன்னெடுக்கப்பட்டதுடன் இறுதிக் கொடுப்பனவு (எஞ்சிய ஐ.அ.டொ. 25 மில்.) 2019 மார்ச்சில் ஒதுக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெண் தொழில் முயற்சியாளர் கடன் மானியமான ஐ.அ.டொ. 9.5 மில்லியனில் ஐ.அ.டொ. 3.1 மில்லியன் பங்கு பற்றல் நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, 2,797 பயனாளர்களுக்கிடையில் ரூபா 22,769.5 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் கடன் திட்டத்தின் கீழ் 2019 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான மானியமாக 325 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ரூபா 486 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறை பெருமளவு ஊழியர்களைக் கொண்டுள்ளது என்ற வகையில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அதிகளவான ஆற்றல்கள் காணப்படுகின்ற போதிலும் நிதிச் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடனுக்கான வழங்கல் மற்றும் கேள்விக்கிடையில் பாரிய இடைவெளியொன்று காணப்படுகின்றது.

மேற்குறித்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு, ஆ.அ. வங்கியுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியதுடன், ஆ.அ. வங்கியினால் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 175 மில்லியனுக்கு மேலதிகமாக 2019-2021 காலப்பகுதியில் மேலதிக ஒதுக்கீடு 11 என்ற வகையில் ஐ.அ.டொ. 75 மில்லியனை வழங்குவதற்கு ஆ.அ. வங்கி இணங்கியுள்ளது. இதற்கமைவாக, இந்த மேலதிக ஒதுக்கீடு ஐ.அ.டொ. 75 மில்லியனை இக்கடன் திட்டத்தின் 1ஆவது மற்றும் 2 ஆவது கட்டங்களில் பங்குபற்றிய அதே நிதி நிறுவனங்களின் ஊடாக ஒவ்வவொரு ஒதுக்கீடும் ஐ.அ.டொ. 25 மில்லியன் ஒதுக்கீடுகளாக மூன்று (03) அரையாண்டுகளில் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன்திட்ட முன்னேற்றம் - 2019 ஏப்பிரல் 30 அன்றுள்ளவாறு**

**(ரூ.மில்)**

| நிதி நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.மில். | கடன் பகிர்வு | | % பகிர்வு | பெண் தொழில் முயற்சிக்கு வழங்கப்பட்ட மானியத்தொகை | பெண் தொழில் முயற்சிக்கான பகிர்வு | | % பகிர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கடன்களின் எண்ணிக்கை | தொகை | | | கடன்களின் எண்ணிக்கை | மொத்தம் | |
| இலங்கை வங்கி | 2,282.74 | 498 | 2,254.70 | 98.77 | 107.78 | 145 | 105.4 | 97.78 |
| மக்கள் வங்கி | 1,788.19 | 206 | 1,436.72 | 80.35 | 18.18 | 6 | 14.15 | 77.82 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,282.74 | 880 | 2,186.15 | 95.77 | 48.24 | 75 | 43.85 | 90.89 |
| டீஎவ்சீசீ வங்கி | 2,907.73 | 214 | 2,894.93 | 99.56 | 68.63 | 19 | 66.74 | 97.24 |
| சம்பத் வங்கி | 2,268.10 | 127 | 2,190.49 | 96.57 | 56.74 | 15 | 56.74 | 99.99 |
| ஹட்டன் நாஷனல் வங்கி | 2,907.73 | 221 | 2,907.73 | 100 | 22.81 | 10 | 22.81 | 100 |
| கொமர்ஷல் வங்கி | 2,282.74 | 153 | 2,261.73 | 99.08 | 80.35 | 23 | 76.36 | 95.02 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 4,104.57 | 341 | 4,005.54 | 97.59 | 77.33 | 22 | 73.95 | 95.62 |
| செலான் வங்கி | 1,134.17 | 73 | 1,134.18 | 100 | 26.04 | 10 | 26.04 | 100 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி | 1,788.19 | 84 | 1,497.33 | 83.74 | 18.18 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **23,746.90** | **2,797** | **22,769.50** | **95.88** | **524.28** | **325** | **486.04** | **92.70** |

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

மேலும், படிம எரிபொருளின் நடைமுறைக் கேள்விக்கேற்ப தொடர்ந்து பயன்படுத்தப்படுமாயின் 30 வருடங்களுக்கு மாத்திரம் படிம எரிபொருள் ஒதுக்குகள் காணப்படும் என்ற வகையில் எதிர்கால சக்தி நெருக்கடியினை முகாமை செய்வதற்கு செலவு குறைந்த மற்றும் சுற்றாடல் நட்பு ரீதியான படிம எரிபொருளிலிருந்து மீள் புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலங்களுக்கு மாறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும். அதிஷ்டவசமாக இலங்கையானது 35 பாகை நெட்டாங்கிற்குள் அமைந்துள்ள "சூரிய பட்டி" என அறியப்படுகின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள நாடு என்ற வகையில் சூரிய மின் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான அதிகூடிய உள்ளார்ந்த ஆற்றலினைக் கொண்டுள்ளது.

இவ்வாறான சாதகமான காரணிகளை கருத்திற்கொண்டு வீடுகள், சமய ஸ்தலங்கள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளின் கூரைகளில் சிறிய சூரிய மின் உற்பத்தி பொறித் தொகுதிகளைப் பொருத்துவதற்கு ஊக்குவிக்கும் வகையில் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆ.அ. வங்கியுடன் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. இதன்படி, இக்கருத்திட்டத்தின்

முதற்கட்டமாக ஐ.அ.டொ. 50 மில்லியனை ஆ.அ.வங்கி ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளதுடன் 2018 இலிருந்து ஆரம்பமாகும் 04 வருட காலப்பகுதியில் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு ஐ.அ.டொ. 200 மில்லியன் வரை நிதியளிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது ஆ.அ. வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட பங்கேற்பு நிதி நிறுவனங்களான மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, சம்பத் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, டி.எவ்.சீ.சீ வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன் ட்ரஸ்ட் வங்கி மற்றும் செலான் வங்கி என்பவற்றின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் ஊடாக, மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைக் கேள்வி செலவிடப்படுமாயின் ஏறக்குறைய ரூபா 35,000 மில்லியன் சூரிய சக்தித் துறையில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் தேசிய மின் வழங்கலுக்கு ஏறக்குறைய 200 மெ.வோ. சூரிய சக்தி மின்சாரத்தினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப் பட்டுள்ளது. மற்றுமொரு வகையில் நோக்குகையில் மன்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மசகு எண்ணெய் இறக்குமதி குறைவடைவதன் மூலம் வெளிநாட்டு செலாவணியில் குறிப்பிடத்தக்கதொரு தொகை சேமிக்கப்படும்.

பொது மக்களின் முறையற்ற பழக்க வழக்கங்கள் மற்றும் பிறழ் நடத்தைகள் காரணமாகவும் தொழிற்சாலை உரிமையாளர்கள் தமது கழிவுகளை வெளியேற்றுவதன் மூலமாகவும் நீர் மாசடைவானது பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான தொழிற்சாலை உரிமையாளர்கள் சுற்றாடல் பாதுகாப்பு விதிகளை மீறும் வகையில் குடிநீர் மூலமாகக் காணப்படும் ஆறுகள் மற்றும் கடற்றொழிலுடன் தொடர்புற்ற களப்புகளிலும் தமது கழிவுகளை நேரடியாக சேர்ப்பிக்கின்றனர். இதனால், எமது சில நீர்நிலைகளின் மாசடைவு மட்டம் எதிர்பார்க்காத அளவு அதிகரித்துள்ளது. இந்த வகையில் ‘‘பவித்ரா கங்கா’’ கருத்திட்டமானது ஆறுகள், களப்புகள் மற்றும் முகத்துவாரங்களுக்கு கைத்தொழிற்சாலைகள் மற்றும் ஹோட்டல்களினால் கழிவுகளை கலக்கச் செய்வதனை முழுமையாக இல்லாதாக்கும் நோக்கத்துடன் ஈ-பிரன்ட்ஸ் கருத்திட்டத்தின் கீழ் சலுகை நிதி உதவியுடன் அடுத்த ஐந்து வருடங்களுக்கு செயற்படுத்தப்படும்.

### 2.2.3 நிதியுதவியல்லாத நிகழ்ச்சித் திட்டங்கள்

நிதி மற்றும் நிதியல்லாத உதவிகளை உள்ளடக்கிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. அதாவது, தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கம்பனிகளை (SME Companies) நிர்மாணித்தல் என்பனவாகும்.

வங்கித் துறையானது அதிக அளவில் பிணையங்களை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலிலேயே அதிக அளவில் தங்கியிருப்பதனால், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கம்பனிகள் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றன. இன்னும் அநேகமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பிணையங்களை முன் வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் இதன் மூலம் கடினமான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன. அதாவது கடன் பெறுகை மற்றும் கடன் பெறுகையின் ஊடாக ஏற்படக் கூடிய வியாபார வளரச்சியைக் கைவிடல், உயர்வான வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்குவோர் அல்லது கடன்களுடன் தொடர்பில்லாத அசைவற்ற சொத்துக்கள் அல்லது நகைகள் போன்றவற்றை பிணையங்களாக முன்வைத்தல் போன்றனவே அந்நெருக்கடிகளாகும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அநேகமான பொருளாதாரங்களில் உருவாக்கப்பட்டுள்ள பிரதான நிகழ்ச்சித் திட்டங்களாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு கடன் பிணைய முறைகளை உருவாக்குதலானது விளங்குகின்றது. இது சார்ந்த இடர்களை ஏற்றல், பகிர்ந்து கொள்ளல், பிணையங்களின் மீது தங்கியிருப்பதனை குறைத்தல் போன்ற இவ்வாறான முறைமைகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு போட்டித் தன்மை வாய்ந்த வட்டி வீதத்தின் கீழ் அதிக அளவிலான கடன்களை வழங்குவதற்கு இந்நிதி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

அதன் படி, அரசாங்கத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் தேசிய உத்தரவாதக் கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்டதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் முன்மொழியப்பட்டுள்ள தேசிய உத்தரவாதக் கம்பனிக்கு ஐஅடொ 100 மில்லியனை அடிப்படை மூலதனமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒப்புரவாக கடன்களுக்கு உள்ள கேள்வி தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தொழில்நுட்ப உதவியொன்று வழங்கப்படுவதோடு, ஆய்வின் கண்டு பிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முன் மொழியப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் நிலைபேறான தன்மையை விருத்தி செய்வதற்காக இந்நிறுவனம் கம்பனிச் சட்டத்தின் கீழ் அரச-தனியார் துறைகளின் பங்கேற்புடன் (Public Private Partnership) ஸ்தாபிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதே போல, அரசாங்கத்தினால், 2018 வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இக்கருத்திட்டத்தின் சக தரப்பு நிதியாக ரூபா. 500 மில்லியன் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. 2018 - 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் 50 புதிய விவசாய மற்றும் மீன்பிடிக் கைத்தொழில் நிறுவனங்கள், பெண்களுக்கு அதிக அளவில் உரித்துடைய 25 நிறுவனங்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகளினால் ஆரம்பிக்கப்படும் 150 வியாபார நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வியாபாரங்கள் கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிகளாகவோ அல்லது சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களாகவோ, விவசாய நிறுவனங்களாகவோ ஸ்தாபிக்கப்படவுள்ளன. குறைந்தது 10 பங்குதாரர்களைக் கொண்ட இக்கம்பனிகளுக்கு அல்லது ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டியதோடு, சகல பங்குதாரர்களும் கம்பனியின் ஆரம்ப மூலதனத்துக்குப் பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் (German International Cooperation – GIZ) இப்பணிக்கான ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவுவதற்கு எதிர்பார்க்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கம்பனிகளுக்கு அந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப உதவி வழங்கப்படும். இக்கம்பனிக்கு “என்டரபிரைஸ் ஸ்ரீலங்கா” கடன் திட்டத்தின் ஊடாக நன்கொடைகள் மற்றும் கடன்கள் உள்ளடங்கலாக விரிவான நிதியுதவிப் பொதியொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

### 2.2.4 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிதியளிப்பு முன்னேற்றம்

அரசாங்கத்தின் தலையீட்டுடன் சலுகை விகிதமொன்றில் நிதியியல் மற்றும் நிதிசாரா வசதிகளை வழங்குவதன் மூலம் நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு ஒத்துழைக்கும் நோக்குடன் இருபத்து இரண்டு (22) திட்டங்கள் “என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, சந்தை வட்டி விகிதத்தில் தமது சொந்த நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் அரச மற்றும் தனியார் வர்த்தக மற்றும் விசேட வங்கிகள் அனைத்தின் மூலமும் அறுபதுக்கு (60) மேற்பட்ட கடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 2018 இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிதியளிப்பு தேவைகளை ஈடு செய்வதற்கு இந்த அனைத்து கடன் திட்டங்களின் ஊடாக அரச மற்றும் தனியார் வங்கிகளினால் ஏறக்குறைய ரூபா 827,896 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.


**அட்டவணை 2.4 : வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் - 2018**

| வங்கி | விவசாய | | சேவைகள் | | கைத்தொழில் | | ஏனைய | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) | கடன்களின் எண்ணிக்கை | மொத்தக் கடன் பெறுமதி (ரூபா. மில்லியன்) |
| இலங்கை வங்கி | 2,196 | 22,833 | 1,080 | 4,689 | 1,643 | 7,102 | 1,006 | 1,515 | 5,925 | 36,139 |
| மக்கள் வங்கி | 273 | 447 | 263 | 980 | 126 | 737 | 1,104 | 4,210 | 1,766 | 6,374 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 3,901 | 4,309 | 19 | 28,372 | 7,073 | 9,092 | 9,807 | 10,340 | 20,800 | 52,113 |
| லங்காபுத்ர வங்கி | 12 | 72 | 13 | 28 | 28 | 212 | 3 | 6 | 56 | 318 |
| சனச அபிவிருத்தி வங்கி | 433 | 1,960 | 1,081 | 3,327 | 0 | 0 | 168 | 305 | 1,682 | 5,592 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 104 | 978 | 93 | 1,669 | 289 | 3,047 | 514 | 5,674 | 1,000 | 11,368 |
| டீஎப்சீசீ வங்கி | 313 | 3,894 | 1,298 | 9,945 | 1,368 | 9,802 | 52 | 403 | 3,031 | 24,044 |
| வர்த்தக வங்கி | 6,632 | 10,252 | 5,909 | 26,181 | 10,403 | 46,621 | 38,826 | 95,077 | 61,770 | 178,133 |
| சம்பத் வங்கி | 2,423 | 21,551 | 5,106 | 72,406 | 5,554 | 49,959 | 39,283 | 106,772 | 52,366 | 250,688 |
| செலான் வங்கி | 1,798 | 11,566 | 4,123 | 86,302 | 4,750 | 21,615 | 996 | 3,330 | 11,667 | 122,813 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 1,689 | 8,115 | 3,872 | 22,038 | 4,153 | 24,816 | 9,216 | 39,134 | 18,930 | 94,103 |
| ஸ்டேன்டாட் சார்டட் வங்கி | 2 | 62 | 54 | 262 | 36 | 431 | 1 | 0 | 93 | 755 |
| பான் ஏசியா வங்கி | 55 | 745 | 34 | 700 | 559 | 4,552 | 524 | 5,203 | 1,172 | 11,200 |
| காகில்ஸ் வங்கி | 68 | 437 | 209 | 2960 | 571 | 2771 | 8 | 99 | 856 | 6,267 |
| இலங்கை சேமிப்பு வங்கி | 0 | 0 | 0 | 0 | 2 | 85 | 1 | 33 | 3 | 118 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 69 | 33 | 0 | 0 | 6 | 3 | 65 | 29 | 140 | 65 |
| அமானா வங்கி | 1,297 | 5,125 | 5,135 | 15,950 | 1,215 | 5,110 | 417 | 1,623 | 8,064 | 27,808 |
| **மொத்தம்** | **21,379** | **92,378** | **28,289** | **275,809** | **37,776** | **185,955** | **101,991** | **273,753** | **189,321** | **827,896** |

மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்

2017ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைகளில் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகையில் 12 சதவீதம் விவசாயத் துறைக்கும், 21 சதவீதம் கைத்தொழில் துறைக்கும், 8 சதவீதம் சேவைகள் துறைக்கும், வழங்கப்பட்டுள்ளதோடு, 59 சதவீதம் ஏனைய அனைத்து துறைகளுடனும் தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறைக்குக் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கீழே வரைபு 1 இன் மூலம் இந்த நிலைமையானது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு 7.1 துறைரீதின சி.ந.தொ. கடன் பகிர்வுகள்**




மூலம் : மேலே அட்டவணையில் உள்ள உரிய வங்கிகள்

### 2.2.5 ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பு (ஜீ.ஐ.இஸற்) - சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - II

ஜேர்மனி பெடரல் குடியரசு மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கிடையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை முதன்முறையாக 2012 இல் கைச்சாத்திடப்பட்டதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ஜீஐஇசற் ஊடாக 2.785 மில்லியன் யூரோ மானியமாக வழங்கப்பட்டது. கருத்திட்டக் காலப்பகுதி “ஜீஐஇசற் - சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - II என அழைக்கப்படும் 2ஆவது கட்டமான 2019 டிசம்பர் 31 வரை நீடிக்கப்பட்டதுடன் ஜேர்மன் நன்கொடையாக 3 மில்லியன் யூரோ மேலதிக வரவு செலவுத் திட்டமாக வழங்கப்பட்டதுடன் இலங்கை அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களுக்காக 2018 வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

முன்னேற்ற அறிக்கைக்கு அமைவாக, 2018 இல் ஏறக்குறைய ரூபா 390 மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஜீ.ஐ. இசற்றினால் செலவிடப்பட்டதுடன் இலங்கை அரசாங்கத்தின் நிதியிலிருந்து ரூபா 7 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய கட்டத்தின் இலக்கானது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் ஏனைய இரண்டாம் நிலை வளர்ச்சி நிலையங்களின் ஆற்றல், பிரத்தியேக நிலை மற்றும் சுற்றாடல் ஸ்திரத் தன்மையினை அதிகரிப்பதாகும்.

1. கொள்கைகள் மற்றும் நிறுவன வேலைச் சட்டக நிலைமை
2. நிதி அடைவு

3. தொழில்நுட்ப மற்றும் சந்தைகளுக்கான அடைவு
4. புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை

## 2.3. கம்பெரலிய – கிராமிய / பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டம்

கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டமானது எமது கிராமங்கள் மற்றும் நகரங்களை அவற்றினது ஆற்றல்களைக் கொண்டு வளர்ச்சி மையங்களாக மாற்றமடையச் செய்வதற்கு தடுக்கக்கூடிய உட்கட்டமைப்புகளின் தேவையினை இல்லாதாக்குவதற்கு 2018 இல் ஆரம்பிக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின் பிரதான இலக்கு பொதுமக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்துவதற்கான கிராமிய மைய அபிவிருத்தி செயன் முறையொன்றினைக் கட்டியெழுப்புவதாகும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தினை வலுவூட்டுவதற்காக பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் கிராமிய வாழ்க்கை நிலைமையினைத் தரமுயர்த்துவதற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாத அடித்தள மக்களினை சென்றடையாத வகையில் இப்பாரிய நிகழ்ச்சித்திட்டங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மிக முக்கிய பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு குளங்களின் புனரமைப்பு, கிராமியப் பாதை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சிறியளவிலான பாலங்களின் அபிவிருத்தி, பாடசாலை மட்ட துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல், விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சிறுவர் பூங்காக்கள் நிர்மாணம், வீடுகளுக்கான மின்சாரம் வழங்கல், சமய நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் புதுப்பித்தல், சமய ஸ்தானங்களுக்கு சூரிய சக்தி மின்சாரத்தினை வழங்குதல் மற்றும் தேவையுடையவர்களுக்கான நிரந்தர கூரை வசதிகளை வழங்குதல் போன்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை இந்த கம்பெறலிய நிகழ்ச்சித் திட்டம் முன்மொழிகின்றது. ஏனைய சமூகப் பொருளாதார உட்கட்டமைப்புகளின் அபிவிருத்தியும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வருவதுடன் நகர வடிகாலமைப்பு முறைமை, சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சிறியளவிலான குடிநீர்த் திட்டங்கள் என்பனவும் பிராந்திய அபிவிருத்தி எண்ணக்கருவில் பிரதான பங்கினை வகிக்கின்றன.

நிதி அமைச்சு, பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு என்பவற்றின் ஒத்துழைப்புடன் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேசச் செயலகங்களின் மூலம் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றது என்றவகையில் இத் திட்டத்தின் செயற்படுத்துகை நுட்ப முறையானது பொதுமக்களுக்கு மிகவும் பரீட்சயமாகக் காணப்படுகின்றது.

2018 டிசெம்பர் 31 அன்றுள்ளவாற கம்பெறலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 5,070 மில்லியன் ஆகும்.

**அட்டவணை 2.5 கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் போக்கு 2018**

| மாகாணம் | பூரணப்படுத்தப்பட்ட பணிகளின் மொத்தப் பெறுமதி | பூரணமாக பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண். |
|---|---|---|
| வட | 715.65 | 973 |
| தென் | 474.32 | 900 |
| கிழக்கு | 1,135.01 | 985 |
| மேல் | 498.93 | 819 |
| ஊவா | 691.06 | 906 |
| மத்திய | 514.34 | 931 |
| வட மேல் | 615.08 | 1241 |
| வட மத்தய | 88.30 | 111 |
| சப்ரகமுவ | 336.88 | 371 |
| **மொத்தம்** | **5,069.57** | **7,237** |

## 2.3 நுண் நிதி

இலங்கையில் நுண் நிதித் துறையானது கடந்த சில வருடங்களாக எதிர்பாராத அளவு வளர்ச்சியடைந்துள்ளது. கிராமியத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றது என்ற வகையில் இலங்கையில் கிராமிய சமுதாய வறுமையினைக் குறைப்பதற்கான மிகச் சிறந்த சாதனமொன்றாக இது காணப்படுகின்றது. நுண் நிதியானது தனியார் குடும்பங்களுக்கான புதிய சேமிப்பு வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் கொடுப்பனவு முறைமையினை இயலச் செய்தல், நுண் மற்றும் சிறிய தொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்துடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. சிறிய அளவு கைத்தொழில், நிர்மாணம் மற்றும் வர்த்தகம் போன்ற ஏனைய பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சிக்கு இது பங்களிப்புச் செலுத்துகின்றது.

நாட்டில் கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வசதி குறைந்த மக்களின் வறுமைத் தணிப்பு மற்றும் நிதி உள்ளீடுகளை உருவாக்குகின்ற வகையில் பல்வேறு நிறுவனங்களின் ஊடாக சலுகை நிதியளிப்புகளை வழங்குவதன் மூலம் அரசாங்கம் பிரதான பங்கினை வகிக்கின்றது. 2018 இல் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களை இலக்காகக் கொண்ட அரசாங்கம் முன்னெடுக்கின்ற பல்வேறு நுண் நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. 2018 இல் அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட நுண் நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு.

**அட்டவணை 2.6: பிரதான நுண் நிதி நிறுவனங்களின் போக்கு - 2018**

(ரூபா.மில்)

| நுண்நிதி நிறுவனம் | கிளைகளின் எண் | வைப்பாளர்கள் எண் | பெறுநர்களின் எண் | மொத்த வைப்புக்கள் | மொத்த முதலீடு | மொத்த கடன் உள்ளடக்கம் |
|---|---|---|---|---|---|---|
| திவிநெகும திணைக்களம் | 1073 | 14,540,246 | 8,868,512 | 113,993 | 85,942 | 68,206 |
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 2,284 | 9,254,618 | 1,193,561 | 140,434 | 139,030 | 72,788 |
| விவசாய அபிவிருத்தி திணைக்களம் | 553 | 802,454 | 695,741 | 827 | 2,211 | 2,122 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 268 | 6,653,368 | 915,720 | 126,193 | 37,193 | 135,442 |
| லங்க புத்ரா அபிவிருத்தி வங்கி | 8 | 64,511 | 5,565 | 298 | 6,202 | 3,690 |
| **மொத்தம்** | **4,186** | **31,315,197** | **11,679,099** | **381,745** | **270,578** | **282,248** |

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

இந்த நுண்நிதி நிறுவனங்கள் கடன் அல்லது வைப்பு வசதிகளாக நிதியியல் சேவைகளை வழங்குகின்றன. பிரதான நுண்நிதி நிறுவனங்களின் நிலுவைக் கடனானது ரூபா 282 பில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றுள் 47 சதவீதம் (ரூபா 135 பில்லியன்) பிராந்திய அபிவிருத்தி வங்கிகளினாலும், 26 சதவீதம் (ரூபா 73 பில்லியன்) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினாலும் 24 சதவீதம் (ரூபா 68 பில்லியன்) திவிநெகும திணைக்களத்தினாலும் பதிவாகியுள்ளது. 2018 இன் இறுதியளவில் இந்நிறுவனங்களின் சேமிப்பு ரூபா 381 பில்லியனாகக் காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 270 பில்லியன் நீண்ட கால மற்றும் குறுகிய கால முதலீடாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளை எதிர்பார்க்கும் பெண்கள் மற்றும் வருமான உற்பத்தி மூலங்களுக்கான அதிகூடிய வட்டிவீதக் கடன்கள் வீட்டுக்குவீடு நுண்நிதிக் கடன்களாக நுண்நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றது. இக்கடன்கள் எவ்வித பிணையங்களோ நிபந்தனைகளோ

எதுவுமின்றி வழங்கப்படுகின்றன. அதிகூடிய வட்டிவீதம் காணப்பட்டபோதிலும் பல கிராம மக்களினால் இக்கடன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்நுண் கடன்கள் அதிக ஆபத்துமிக்க சிறிய விவசாய நடவடிக்கைகள், சாத்தியவளமற்ற பொருளாதார செயற்பாடுகள் மற்றும் சிலபோது நுகர்வு நோக்கங்களுக்காக பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நாட்டில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகக் காணப்படுகின்ற நீண்டகால வளர்ச்சி காரணமாக இவ்வியம் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் நுண்நிதி கடன்பெறுநர்கள் கடன் பொறிக்குள் விழுகின்றனர்.

மேற்குறித்தவற்றைக் கருத்திற்கொண்டு 2018 இல் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலநறுவை ஆகிய வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஐந்து செய்கை காலத்தின்போது இலங்கை நுண்நிதி வழங்குநர் சம்மேளனம் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கமபெனிகளிலிருந்து ஆகக்கூடியது ரூபா 100,000 வரை கடன் பெற்ற பெண்களுக்கான கடன் நிவாரணம் வழங்குவதற்கு கடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.

இதற்கமைவாக, 37 நுன்நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிக் கம்பெனிகள் தமது கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதுடன் குறித்த நுண்நிதிக் கடன்கள் ஒவ்வொன்றினதும் மூலதனம் மற்றும் வட்டி வீதங்கள் இரண்டும் இந்நிவாரணத் திட்டத்தின் கீழ் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளன. மூலதனத்தினைப் பதிவழிப்புச் செய்வதன் மூலம் இழக்கப்படுகின்ற நட்டம் நிதிக் கம்பெனி அல்லது நுண்நிதி நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் சமமான அரையாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக மூன்று வருட காலப்பகுதிக்குள் மீளளிப்புச் செயயப்படும். இத்திட்டத்தின் கீழ் வட்டியினைப் பதிவழிப்புச் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற நட்டம் குறித்த நிதிக் கம்பெனிகள் அல்லது நுண்நிதி நிறுவனங்கள் மூலம் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். பதிவழிப்புச் செய்யப்பட்ட மூலதன மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பெண்களுக்கு வழங்கப்பட்ட நுண்நிதிக் கடன்களுக்கான படுகடன் நிவாரணத்தின் பொழிப்பு அறிக்கை பின்வருமாறு.


**அட்டவணை 2.7 வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பெண்களுக்கு வழங்கப்பட்ட நுண் நிதி கடன்களுக்கான கடன் நிவாரணம்**

(ரூபா மில்)

| நிறுவனம் | கடன் பெறுநர்களின் எண். | பதிவளிக்கப்பட்ட மூலதனத் தொகை | பதிவளிக்கப்பட்ட வட்டி |
|---|---|---|---|
| ஆலியன்ஸ் பைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | 277 | 6.68 | 0.89 |
| ஆர்த்தவிடா இன்டர்மீடியரி லிமிடெட் | 253 | 3.99 | 0.58 |
| அக்ரோ மைக்ரோ இன்வெஸ்மன்ட் லிமிடெட் | 70 | 4.37 | 0.85 |
| ஆர்பிகோ பைனாள்ஸ் கம்பனி பி.எல்.சி | 151 | 5.29 | 0.62 |
| ஏசியா அஸட்ஸ் பைனானிஸ் பிஎல்சி | 1,805 | 49.32 | 5.88 |
| பிரண்டினா மைக்கோ இன்வெஸ்மன்ட் கம்பனி | 236 | 6.82 | 0.94 |
| விம்புத் பைனான்ஸ் பி.எல்.சி. | 7,041 | 180.90 | 24.02 |
| பிராக் லங்கா பைனான்ஸ் பி.எல்.சி. | 2,110 | 87.35 | 10.44 |
| சென்றல் பைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | 5 | 0.20 | 0.02 |
| கொமர்ஷல் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. | 833 | 26.26 | 3.26 |
| கொமர்ஷல் கிரடிட் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. | 8,162 | 215.19 | 14.81 |
| இ.சி.எல்.ஓ.எவ் லங்கா பிரைவேட் லிமிடெட் | 148 | 3.08 | 0.01 |
| எச்.என்.பி கிராமின் பைனான்ஸ் லிமிடெட் | 5,438 | 154.97 | 9.02 |
| கானரிச் பைனான்ஸ் லிமிடெட் | 2,695 | 82.51 | 13.39 |
| லக்ஜய மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட் | 60 | 0.74 | 0.02 |
| லோன்ஸ் அன்ட் லாண்ட் இன்வெஸ்மன்ட் பிரைவேட் லிமிடெட் | 208 | 4.28 | 1.01 |
| எல்.ஓ.எல்.சீ பைனான்ஸ் பி.எல்.சி. | 2,214 | 101.83 | 9.61 |
| மேக்கன்டைல்ஸ் இன்வெஸ்மன்ட்ஸ் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. | 28 | 0.67 | 0.04 |
| மேச்சன்ட்ட பாங் ஒவ் ஸ்ரீ லங்கா | 2,516 | 74.09 | 10.22 |
| முஸ்லிம் எய்ட் மைக்ரோ கிரடிட் (கராண்டி) லிமிடெட் | 111 | 1.79 | 0.16 |
| நேஷன்ஸ் லங்கா பைனான்ஸ் பி.எல்.சி. | 2,597 | 56.08 | 6.58 |
| பீப்பிள்ஸ் மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட் | 650 | 9.47 | 1.25 |
| பிரகதி சேவா பௌண்டேஷன் | 194 | 4.14 | 1.05 |
| பொரஸ்பரஸ் கப்பிட்டல் அன்ட் கிரடிட் லிமிடெட் | 46 | 1.50 | 0.14 |
| பியோவின் கிரடிட் அன்ட் இன்வெஸ்மன்ட் லிமிடெட் | 11 | 0.19 | 0.05 |
| ரஜரட்ட பிரஜா கேந்திரய | 118 | 3.58 | 0.52 |
| சரிராம்ஸ் ஸ்ரீ லங்கா நஷனல் பௌண்டேசன் | 210 | 7.11 | 0.41 |
| சர்வோதய டிவலப்மன்ட் பைனான்ஸ் | 1,970 | 50.44 | 6.82 |
| சேஜய மைக்ரோ கிரடிட் லிமிடெட் | 96 | 1.12 | 0.21 |
| சேவா கொமியூனிற்றி கிரடிட் லிமிடெட் | 86 | 2.29 | 0.41 |
| சிங்கர் பைனான்ஸ் (லங்கா) பி.எல்.சி. | 224 | 5.48 | 0.59 |
| சவுத் ஏசியா பாட்னஷிப் ஸ்ரீ லங்கா | 20 | 0.38 | 0.02 |
| ரி.கே.எஸ் பைனான்ஸ் லிமிடெட் | 969 | 19.26 | 2.15 |
| ட்ரேட் பைனான்ஸ் அன்ட் இன்வெஸ்மன்ட் | 193 | 4.54 | 0.50 |
| விஷன் பண்ட் லங்கா லிமிடெட் | 3,097 | 73.91 | 13.96 |
| வை புரோ பிரைவேட் லிமிடெட் | 138 | 2.42 | 0.40 |
| யங்மென்ஸ் கிறிஸ்டியன்ஸ் அசோசியேனச் மட்டக்களப்பு | 159 | 3.51 | 0.54 |
| **முழு மொத்தம்** | **45,139** | **1,255.74** | **141.41** |


பிராந்திய அடிப்படையில் பயன்பெறுநர்களை நோக்குகின்றபொழுது ஆகக்கூடிய கடன் எண்ணிக்கையான 10,999 கடன்கள் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் மொத்த பதிவழிக்கப்பட்ட 45,139 கடன்களில் இது 24 சதவீதமாகும். இப்படுகடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மையடைந்த பெண்களின் எண்ணிக்கை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அநுராதபுரம், புத்தளம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அதிகமாகும்.

**வரைபு 7.2 மாவட்ட ரீதியாக வரட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பெண்களுக்காக வழங்கப்பட்ட நுண்நிதிக் கடன்களுக்கான கடன் நிவாரணம்**




2018 இன்போது இலங்கை மத்திய வங்கி வருடத்திற்கு ஆகக்கூடியது 35 சதவீத வட்டிவீத இடைவெளியினை அறிமுகப்படுத்தியதுடன் இது ஆகக்கூடிய வட்டி வீதத்தினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் நிதிக் கம்பெனிகளினால் தனிப்பட்டவர்களுக்கு அல்லது குழு கடன் வழங்கல் முறைமையின் கீழுள்ள தனிப்பட்டவர்களுக்கான கடன்களுக்கானதாகும்.

**வரைபு 7.3 வங்கிகளினால் நுண்நிதித் துறைகளுக்கான கடன் பகிர்வுகள் - 2018**




2018 இல் வங்கித் தொழிற்துறை நுண் நிதித்துறைக்கு ரூபா0 76 பில்லியனை கடனாக வழங்கியுள்ளது. இதில் ரூபா 47 பில்லியன் சனச வங்கியினால் வழங்கப்பட்டதுடன் ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பன முறையே ரூபா 13 பில்லியன் மற்றும் ரூபா 6 பில்லியனை 2018 இல் வழங்கியுள்ளன. அரச வங்கிகளுடன் ஒப்பிடுகையில் பல்வேறு நுண் நிதி நிகழ்ச்சித்திட்டங்களின்

ஊடாக நிதியளிப்பதற்கான ஏற்பாடுகளை குறிப்பிடத்தக்களவு கொண்டிருக்கும் தனியார் வங்கிகளாக கொமர்ஷியல் வங்கி மற்றும் செலான் வங்கி என்பன காணப்படுகின்றன.

## 2.5. விவசாய துறை அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு

### 2.5.1 உர மானிய நிகழ்ச்சித்திட்டம்

*2.5.1.1 நெல் விவசாயிகளுக்கான உரத்திற்கான காசு மானியம்*

2016 சிறுபோகத்தின்போது அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உரத்திற்கான காசு மானிய நிகழ்ச்சித் திட்டம் 2017/2018 பெரும்போகம் வரை தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. இதற்கமைவாக வருடமொன்றுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கான காசு மானியம் ரூபா 25,000 ஆகக் கூடியது இரண்டு ஹெக்டேயர்களுக்கு வழங்கப்பட்டது. இரண்டு ஹெக்டேயர்களைக் கொண்ட சிறியளவிலான நெற் செய்கையாளர்கள் வருடம் ஒன்றிற்கு ரூபா 50,000 இனை காசு மானியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துப் பெற்றதுடன் அவர்கள் ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு பருவ காலங்களுக்கு தனித்தனியான காசு மானியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காசு மானியத்தினைப் பயன்படுத்தி நெற் செய்கையாளர்கள் தமக்குத் தேவையான இரசாயணப் பசளையினை அல்லது சேதனப் பசளையினை நாடு முழுவதிலுமுள்ள அரச அல்லது தனியார் உர விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்வதற்கு சுதந்திரத்தினைப் பெற்றுள்ளனர். அரசாங்கத்தின் புதிய கொள்கையினை அமுல்படுத்தும் வகையில் நெல்லுக்காக பயன்படுத்தப்படும் யூரியா, முக்கூட்டு சுப பொசுப்பேற்று மற்றும் பொட்டாசியம் மியூரியேற் ஆகிய மூன்று பிரதான பசளை வகைகளுக்கு ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 2,500 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த காசு மானியமானது நெற் செய்கையாளர்களின் உரிய வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுவதுடன் விவசாய அமைச்சின் இணையத்தில் பிரசுரிக்கப்படும்.

2017/18 பெரும் போகத்தின்போது உர காசு மானிய திட்டத்தின்கீழ் 882,298 நெல் விவசாயிகளுக்கு ரூபா 8,002 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.8 : உர காசு மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் - பெரும்போகம் 2017/18**

| மாவட்டம் | உரத்தினை பெற்றுக்கொண்ட விவசாயிகளின் எண். | பயிரிடப்பட்ட பரப்பு (ஹெக்) | பகிரப்பட்ட உரம் (ரூ.மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 7,051 | 2,691 | 34.47 |
| கம்கஹா | 24,733 | 9,019 | 120.32 |
| களுத்துறை | 25,618 | 10,632 | 134.74 |
| கண்டி | 30,511 | 12,216 | 156.47 |
| மாத்தளை | 33,600 | 18,531 | 235.05 |
| நுவரேலியா | 13,759 | 5,543 | 69.95 |
| காலி | 24,719 | 10,343 | 131.30 |
| மாத்தறை | 31,520 | 13,104 | 171.46 |
| அம்பாந்தோட்டை | 44,706 | 34,457 | 431.97 |
| யாழ்ப்பாணம் | 18,105 | 9,907 | 132.49 |
| மன்னார் | 12,470 | 14,793 | 184.91 |
| வவுனியா | 12,579 | 14,456 | 180.70 |
| முல்லைத்தீவு | 14,247 | 17,379 | 217.23 |
| கிளிநொச்சி | 17,328 | 24,979 | 312.23 |
| மட்டக்களப்பு | 41,554 | 51,477 | 643.46 |
| அம்பாறை | 76,588 | 78,941 | 986.76 |
| திருகோணமலை | 41,573 | 39,107 | 488.83 |
| குருநாகல் | 108,280 | 45,827 | 587.30 |
| புத்தளம் | 7,319 | 5,443 | 68.64 |
| அநுராதபுரம் | 90,325 | 79,223 | 990.34 |
| பொலநறுவை | 65,789 | 65,109 | 813.86 |
| பதுளை | 49,066 | 25,328 | 320.69 |
| மொனராகலை | 46,134 | 29,629 | 370.60 |
| இரத்தினபுரி | 24,497 | 11,358 | 143.76 |
| கேகாலை | 20,227 | 5,349 | 74.15 |
| **மொத்தம்** | **882,298** | **634,838** | **8,001.67** |

*மூலம் : விவசாயத் திணைக்களம்*

## *2.5.1.2 நெல் விவசாயிகளுக்கான உரத்தைப் போன்று ஏனைய மானியங்கள்*

உரத்தைப் போன்ற ஏனையவற்றுக்கான மானியத்துக்கு அதிக கேள்வி காணப்பட்டதனால் 2018 சிறு போகத்திலிருந்து 50 கி.கி. உறையொன்றுக்கு ரூபா 500 மானிய விலையில் நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் 3 பிரதான உர வகைகளுக்கு மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக யூரியா, முக்கூட்டு சுப்பர் பொசுப்பேற்று மற்றும் பொட்டாசியம் மியூரியேற் என்பன பிரதான அரச உரக் கம்பெனிகளின் விநியோகத்தர்களின் ஊடாக விவசாய சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

2018 சிறுபோகத்தின்போது 110,924 மெ.தொன் உரம் 564,882 விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

அட்டவணை 2.9 : உர மானிய நிகழ்ச்சித் திட்டம் - 2018 சிறுபோகம்

| மாவட்டம் | உரத்தைப் பெற்று கொண்ட விவசாயிகள் எண்ணிக்கை | பயிரிடப்பட்ட நிலப் பரப்பு (ஹெக்) | பகிரப்பட்ட உரத்தின் அளவு (மெ.தொ.) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | யூரியா | பொசுப்பேற்று | பொட்டாசியம் | மொத்தம் |
| கொழும்பு | 2,800 | 1,051 | 99 | 52 | 109 | 259 |
| கம்பஹா | 15,679 | 2,409 | 667 | 250 | 541 | 1,458 |
| களுத்துறை | 15,199 | 6,043 | 576 | 303 | 631 | 1,510 |
| கண்டி | 24,469 | 7,613 | 1,395 | 388 | 4,029 | 5,811 |
| மாத்தளை | 18,435 | 9,333 | 2,100 | 440 | 534 | 3,074 |
| நுவரேலியா | 10,763 | 4,175 | 764 | 183 | 213 | 1,159 |
| காலி | 8,266 | 3,878 | 323 | 165 | 359 | 847 |
| மாத்தறை | 24,727 | 10,014 | 1,530 | 462 | 836 | 2,828 |
| அம்பாந்தோட்டை | 41,458 | 33,246 | 6,881 | 1,621 | 1,784 | 10,286 |
| குருநாகல் | 115,824 | 48,402 | 8,846 | 2,115 | 2,435 | 13,396 |
| புத்தளம் | 13,639 | 9,607 | 1,940 | 466 | 525 | 2,931 |
| அனுராதபுரம் | 41,013 | 32,340 | 6,617 | 1,565 | 1,684 | 9,867 |
| பொலநறுவை | 58,894 | 61,346 | 12,612 | 2,950 | 3,186 | 18,748 |
| பதுளை | 29,129 | 15,863 | 3,085 | 725 | 824 | 4,633 |
| மொனராகலை | 23,406 | 13,194 | 2,628 | 619 | 686 | 3,933 |
| இரத்தினபுரி | 18,196 | 8,749 | 1,555 | 403 | 571 | 2,529 |
| கேகாலை | 17,574 | 4,575 | 430 | 226 | 474 | 1,129 |
| அம்பாறை | 43,131 | 17,541 | 9,259 | 2,151 | 2,343 | 13,752 |
| திருகோணமலை | 16,884 | 16,903 | 3,435 | 833 | 914 | 5,181 |
| மட்டக்களப்பு | 17,477 | 22,119 | 4,575 | 1,078 | 614 | 6,267 |
| வவுனியா | 631 | 405 | 82 | 20 | 22 | 124 |
| யாழ்ப்பாணம் | 3,268 | 1,342 | 219 | 46 | 60 | 325 |
| மன்னார் | 1,240 | 458 | 97 | 22 | 25 | 144 |
| முல்லைத்தீவு | 1,744 | 1,602 | 328 | 78 | 87 | 493 |
| கிளிநொச்சி | 1,036 | 765 | 160 | 37 | 41 | 238 |
| **மொத்தம்** | **564,882** | **332,973** | **70,200** | **17,199** | **23,525** | **110,922** |

*மூலம்: விவசாயத் திணைக்களம்*


### 2.5.1.3 ஏனைய பயிர்களுக்கான உர மானியம்

ஒரு பயிரிலிருந்து பல பயிர்களை பயிரிடுகின்ற தமது ஆற்றலினை விரிவாக்குவதற்கு விவசாயிகளுக்கான ஊக்குவிப்பொன்றாகவும் நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் ஏனைய பயிர்களுக்கான உர மானியம் பின்வருமாறு சலுகை விலைகளில் 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

- 50 கி.கி. ஏதேனும் வகையிலான உரப் பையொன்று ரூபா 1,000 இற்கு விற்பனை செய்யப்படும்.
- 50 கி.கி. கலவை உரப் பையொன்று ரூபா 1,150 இற்கு விற்பனை செய்யப்படும்.

இந்நிகழ்ச்சித்திட்டமானது தனியார் மற்றும் அரச விற்பனை நிலையங்களில் பெருமளவிலான நேரடி மற்றும் கலப்பு வகை பசளையினை நுகர்வோருக்கு வழங்குகின்ற அதேவேளை பசளையின் கிடைப்பணவினை அதிகரிக்கச் செய்கின்றது.

2018 இல் மொத்தமாக 655,844 மெ.தொன் உரமானது நெற்செய்கையல்லாத ஏனைய பல்வேறு பயிர்களுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.



மூலம் : கமத்தொழில் அமைச்சு

### 2.5.2 விவசாயக் கடன்
#### 2.5.2.1. புதிய விரிவான கிராமியக் கடன் திட்டம்

விவசாயிகள், சேகரிப்பாளர்கள், விவசாய அடிப்படை கைத்தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வி அதேபோன்று பங்குபற்றுகின்ற நிதி நிறுவனங்களின் விருப்பு என்பவற்றினால் 2018 இல் புதிய விரிவான கிராமிய கடன் திட்டத்தின் கீழ் தமது சொந்த வளங்களின் மூலம் முற்பணமாக வழங்கப்படுவதன் மூலம் கடன்களுக்கான கடன் வழங்கும் வங்கிகளுக்கு வட்டி மானியத்தினை அரசாங்கம் தொடர்ந்து வழங்கி வருகின்றது. பெரும்பாலான கிராமியக் கருத்திட்டங்கள் சிறியளவு விவசாயிகளினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயத்திற்கான கடன் வசதி பங்குபற்றுகை நிதி நிறுவனங்களினால் 7 சதவீத சலுகை வீதத்தில் செயற்படுத்தப்படுவதுடன் திறைசேரி குறித்த நிதி நிறுவனங்களுக்கான வட்டியில் 5 சதவீதத்தினை வழங்குகின்றது. நெல், மிளகாய், சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மரக்கறி உள்ளடங்கலான 33 சிறிய பயிர்களை இச்செயல் திட்டம் உள்ளடக்கியுள்ளது. 2018 இல் கிராமியக் கடன் திட்டத்தன்கீழ் தமது சொந்த நிதியினைப் பயன்படுத்தி கடன் வழங்கிய பங்குபற்றுகை நிதி நிறுவனங்களுக்கு ரூபா 228 மில்லியனை வட்டி மானியமாக வழங்கியுள்ளது.


**அட்டவணை 2.10. புதிய விரிவான கடன் திட்டத்தின்கீழ் கடன் பகிர்வுகள் - 2018**

| பயிர் | ஏக்கர் ஒன்றுக்கான அதிகபட்ச கடன் எல்லை (ரூபா) | அதிகபட்ச நில அலகுகள் (ஏக்கர்) | வழங்கப்பட்ட கடன்களின் எண் | விடுவிக்கப் பட்ட நிதி (ரூ.மில்.) | விரிவுபடுத்தப்பட்ட நிலம் (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| நெல் | | | 52,394 | 5,664 | 211,297 |
| நீர்ப்பாசனம் | 30,000 | 10 | | | |
| மழை ஊட்டி | 32,000 | 10 | | | |
| சோளம் | 34,000 | 10 | 10,748 | 1,181 | 40,500 |
| உருளைக் கிழங்கு | 252,000 | 2 | 5,492 | 1,034 | 7,078 |
| வெங்காயம் | 140,000 | 2 | 4,406 | 679 | 7,230 |
| மிளகாய் | 88,000 | 2 | 1,466 | 122 | 2,180 |
| மரக்கறி | 31,000-119,000 | 2 | 2,473 | 235 | 4,849 |
| வேர்கள்,கிழங்குவகை | 32,000- 252,000 | | 5 | 0 | 13 |
| பருப்பு வகைகள் | 19,000- 34,000 | | 56 | 4 | 178 |
| எண்ணெய் விதைகள் | 14,000- 31,000 | | 39 | 4 | 131 |
| ஏனைய | 70,000 | 2 | 1,136 | 99 | 2,259 |
| **மொத்தம்** | | | **78,215** | **9,022** | **275,714** |

மூலம் : பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2018 இன்போது குறித்த கிராமிய கடன் திட்டத்தின்கீழ் கடன்களுக்கான கேள்வி நாட்டில் நிலவிய சமாதான சூழல் மற்றும் பொருளாதார நிலைமை காரணமாக அதிகரித்தது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2017 இல் 71,397 இலிருந்து 2018 இல் 78,215 ஆக அதிகரித்துள்ள அதேவேளை மொத்தக் கடன் பகிர்வு 2017 இல் ரூபா 7,846 மில்லியனிலிருந்து 2018 இல் ரூபா 9,022 மில்லியனாக அதிகரித்தது. கடன் பகிர்வினைப் பொறுத்தவரையில் ஆகக்கூடிய கடன் வரையறையான ரூபா 320,000 இற்கு குறைவான சிறிய கடன்கள் பெரும்பாலும் நெற் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் 2018 இல் மொத்தக்கடன் பகிர்வு 67 சதவீதமாகக் காணப்பட்டது. 2018 இல் விவசாயச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்த பரப்பானது 275,714 ஏக்கர்கள் என்பதுடன் அதில் சிறுபயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டது 77 சதவீதமாகும். 2017 உடன் ஒப்பிடுகையில் மொத்தக் காணிப் பயன்பாடு 2018 இல் 17 சதவீதத்தினால் அதிகரித்தது.


**வரைபு 2.5 மாவட்ட ரீதியாக 2018 புதிய முழுமையான கிராமிய கடன்**




மூலம் : பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பிராந்திய ரீதியில் கடன் பகிர்வானது அநுராதபுர மாவட்டத்தில் அதிகூடிய எண்ணிக்கையிலான பயன்பெறுநர்கள் காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து பொலநறுவை, அம்பாறை, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் பதிவாகின.

**எண்ணிக்கை 2. 6 பயிர்வாரியாக வழங்கப்படும் கடன்கள் 2018**




மூலம் : பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 2.5.2.2. பால் உற்பத்தித்துறை அபிவிருத்திக் கடன் திட்டம்

ஆகக் குறைந்தது 25 பசுக்களைக் கொண்ட ஆகக் குறைந்தது 1000 பெரிய பண்ணைகளைத் தாபிக்கும் நோக்கத்துடன் 2013 இல் வர்த்தக ரீதியான பால் உற்பத்தித்துறை அபிவிருத்திக் கடன் திட்டம் பால் பெறுமதி சங்கிலியுடன் தொடர்பான வர்த்தக அளவிலான பாற்பண்ணைச் செயற்பாடுகளை ஊக்கவிப்பதற்கு நடுத்தரவிலான தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். தெரிவுசெய்யப்பட்ட 13 நிதிக் கம்பனிகளுக்கு அரசாங்கத்தினால் வட்டி மானியமாக வருடமொற்றிற்கு 6 சதவீதம் என்ற அடிப்படையில் வர்த்தக பாற்பண்ணைச் செயற்பாடுகளுக்காக நடுத்தரத்திலிருந்து அதிகளவான பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் பெற்றுக்கொண்ட கடன் வசதிகளுக்கு அரசாங்கத்தினால் வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஆகக்கூடிய கடன்தொகை ஆறு மாத சலுகைக் காலம் உள்ளடங்கலான 5 வருட காலப்பகுதியில் மீள் கொடுப்பனவுக் கடனுக்காக ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளிலுள்ள பாற்பண்ணையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2014 இல் பண்ணையொன்றுக்குத் தேவையான பசுக்களின் எண்ணிக்கை தொழில்முயற்சியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க 7 ஆகக் குறைக்கப்பட்டது.

**அட்டவணை 2.11 வர்த்தக ரீதியாக பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டத்தின் முன்னேற்றம்**

(ரூபா மில்.)

| ஆண்டு | பயனாளிகள் எண். | கடன் தொகை | செலுத்தப்பட்ட மானியம் |
|---|---|---|---|
| 2013 | 60 | 202.2 | 1.78 |
| 2014 | 608 | 1010.1 | 41.93 |
| 2015 | 1,424 | 1,229.80 | 80.64 |
| 2016 | 2,667 | 1,633.49 | 139.4 |
| 2017 | 1,671 | 1,648.50 | 173.24 |
| 2018 | 288 | 277.9 | 4.3 |
| **மொத்தம்** | **6,718** | **6,001.99** | **441.29** |

மூலம் : பிராந்திய அபிவிருத்தி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கடந்த இரண்டு வருடங்களின் போது வர்த்தக அளவிலான பால் அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் கடன்களுக்கான கேள்வி அதிகரித்ததனால் 2014 இன் இறுதியில் கடன்பெறுநர்களுக்கான ஏற்புடைய வட்டி வீதம் 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட்டது. இக்கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்த பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை 6,718 ஆகக் காணப்பட்டதுடன் 2018 இன்

இறுதியில் மொத்தக் கடன் பகிர்வானது ரூபா 6,002 மில்லியனாக இருந்தது. 2018 டிசம்பர் அளவில் வட்டி மானியமாக தெரிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு அரசாங்கம் ரூபா 441 மில்லியனை வழங்கியுள்ளது.

### 2.5.3. களஞ்சிய வசதிகள்

உலக வங்கியின் உதவியுடன் நெல், சோளம், சோயா அவரை, உளுந்து, மிளகு, நிலக்கடலை போன்ற உற்பத்திகளை பின்னர் சிறந்த விலையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அறுவடைக் காலத்தின் போது களஞ்சியப்படுத்துகின்ற சிறந்த களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட விவசாய மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில் சிறந்த தொழில்நுட்பத்துடனும் சகல வசதிகளுடனும் கூடிய களஞ்சிய வசதிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. இந்தக் களஞ்சியசாலைகளின் பிரதான நோக்கம் இலத்திரணியல் மற்றும் கைமாற்றத்தக்க பற்றுச்சீட்டு நிதி முறைமையொன்றின் மூலம் நிதிச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பிணையாக தமது உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வசதியளிப்பதாகும். 48,000 மெற்றிக் தொன் மொத்தக் களஞ்சிய கொள்ளளவுடன் அநுராதபுரம், மொனராகலை, மன்னார், இரத்தினபுரி, கிளிநொச்சி மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் 6 களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உபுள்தெனிய (அநுராதபுரம்) களஞ்சியசாலைகளில் 2018இன் போது 54 விவசாயிகள் தமது உற்பத்திகளை களஞ்சியப்படுத்தியுள்ளதுடன் 48 விவசாயிகள் தமது களஞ்சியசாலைப் பற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி பிராந்திய அபிவிருத்தி வங்கியிலிருந்து உத்தரவாதக் கடனாக ரூபா 5 மில்லியன் குறுகிய காலக் கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். புத்தள (மொனராகலை) களஞ்சியசாலையில் 56 விவசாயிகள் இதே காலப் பகுதியில் தமது உற்பத்திகளை களஞ்சியப்படுத்தியுள்ளதுடன் 31 அதில் விவசாயிகள் ரூபா 2 மில்லியன் குறுகிய கால கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். மன்னார் களஞ்சியசாலையில் இதே காலப்பகுதியில் 53 விவசாயிகள் தமது உற்பத்திகளை களஞ்சியப்படுத்தியுள்ளதுடன் அதில் 37 விவசாயிகள் தமது களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டு முறைமையினைப் பயன்படுத்தி ரூபா 2 மில்லியன் குறுகிய காலக் கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

2018 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு நெல், சோளம், சீசம், சோயா அவரை, கௌபி மற்றும் உளுந்து ஆகிய ஆறு வகையான தானியங்கள் உபுல்தெனிய களஞ்சியசாலையில் சேமிக்கப்பட்டுள்ளன. (251 மெ.தொன்) புத்தள களஞ்சியசாலையில் நெல், சோளம், மிளகு மற்றும் நிலக்கடலை ஆகிய நான்கு வகையான தானியங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. (155 மெ.தொன்) மன்னார் களஞ்சியசாலையில் பல்வேறு வகையான நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது (477 மெ.தொன்). ஒவ்வொரு பிரதேசத்திலும் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை அறுவடைக் காலப்பகுதியில் களஞ்சியங்களில் சேமிப்பதுடன் விலை அதிகரித்து ஸ்திர நிலையினை அடையும் போது அதனை விற்பனை செய்கின்றனர்.

2018 இன் போது களஞ்சியத்தில் வைக்கப்பட்ட இருப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 42 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை அவற்றின் விற்பனையின் போது ரூபா 51 மில்லியனாகக் காணப்பட்டது. எனவே, விவசாயிகள் நேரடியாக ரூபா 6 மில்லியனை நன்மையாகப் பெற்றுள்ளனர். அதே வேளை மேற்குறித்த மூன்று களஞ்சியசாலைகளின் மொத்த வருமானம் ரூபா 3 மில்லியனாகும்.

பொலநறுவை, கிளிநொச்சி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மூன்று புதிய களஞ்சிய சாலைகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே பொது மக்களுக்கு கையளிக்கப்பட்டு குறித்த மாவட்ங்களில் அறுவடை இடம் பெறும்வரை காத்துள்ளன.

### 2.5.4 கட்டாய பயிர்க் காப்புறுதி

கமத்தொழில் மற்றும் கமத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ''கெத்தட்ட அருண'' பொஹொர திரிய'' பயிர்க் காப்புறுதி திட்டம் நெற் பயிர் பாதிப்புக்கு மாத்திரமான பாதுகாப்பினை வழங்குவதுடன் ஏனைய பயிர் பாதிப்புகளுக்கான உண்மையான செலவினம் உள்ளடக்கப்படுவதில்லை. இதற்கமைவாக, சோளம், சோயா அவரை, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் போன்ற ஏனைய வர்த்தகப் பயிர்களையும் உள்ளடக்கியதாக காப்புறுதியினை விரிவாக்கும் வகையில் 2018 இல் ''கட்டாயப் பயிர்க் காப்புறுதி திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்தின் நிதி ஆபத்து குறைக்கப்படுவதுடன் விவசாயிகளுக்கான நட்டஈடு எவ்வித பாதிப்பும் இன்றி வழங்கப்படுவதுடன் பயிர் சேதத்தின் உண்மையான நட்டம் உள்ளடக்கப்படுகின்றது.

இக்காப்புறுதித் திட்டமானது வறட்சி, வெள்ளம் மற்றும் காட்டு யானைகளின் தாக்கம் என்பவற்றினால் பயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்துக்கான நிவாரணத்தினை விவசாயிகளுக்கு வழங்குகின்றதுடன் ஏக்கர் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூபா 40,000 செலுத்தப்படுகின்றது. 2017/2018 பெரும் போகத்தின் போது 247,852.5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட தானியங்களின் அழிவுக்கான நட்ட ஈடாக 141,888 விவசாயிகளுக்கு ரூபா 2,024 மில்லியன் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதுடன் 2018 சிறுபோகத்தில் தானிய அழிவுக்கான மதிப்பிடப்பட்ட செலவினம் ஏறக்குறைய ரூபா 1,567 மில்லியனாகும்.

வட மாகாணத்தில் 2018 டிசம்பரில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெருமளவு பயிர்ச்செய்கை அழிவடைந்தது. இது ஒரு தேசிய அனர்த்தம் என்ற வகையில் 2018/2019 பெரும்போகம் முடிவடைவதற்கு முன்னர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியான நட்டஈடு வழங்கப்பட்டது. இதற்கமைவாக மேற்குறித்த 4 மாவட்டங்களிலும் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அழிவடைந்த பயிர்களுக்கான நட்டஈடாக 3,085 விவசாயிகளுக்கு ரூபா 159 மில்லியன் வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, "சேனா" புழுவினால் ஏற்பட்ட தானிய அழிவுகளுக்கான நட்ட ஈடு வழங்குவதற்கு ஏஐஜபி மூலம் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. சோளப் பயிர்ச்செய்கை இதன் மூலம் நேரடியாகப் பாதிக்கப்பட்டதுடன் அம்பாறை மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் முறையே 408.19 மற்றும் 1,340.83 ஏக்கர்கள் பாதிப்படைந்தன. இதற்கமைவாக கமத்தொழில் திணைக்களம் மற்றும் கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அழிவுற்ற பயிர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு இம்மாவட்டங்களிலுள்ள முறையே 307 மற்றும் 128 விவசாயிகளுக்கு ரூபா 16 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் வழங்கப்பட்டது. 100 சதவீதம் அழிவடைந்த அல்லது சேதமடைந்த பயிர்களுக்கு மாத்திரம் நட்டஈடு வழங்கப்பட்டது.

**அட்டவணை 2.12 : கட்டாயப் பயிர் காப்புறுதி திட்டம் 2017-2018 (பெரும்போகத்தின்) முன்னேற்றம்**

**(ரூபா மில்.)**

| மாவட்டம் | பயனாளிகளின் எண். | செலவினம் (ரூ.மில்.) |
|---|---|---|
| அனுராதபுரம் | 19,525 | 391.13 |
| மொனராகலை | 17,639 | 281.70 |
| அம்பாறை | 18,794 | 227.33 |
| மட்டக்களப்பு | 19,746 | 216.37 |
| வவுனியா | 5,083 | 126.58 |
| மன்னார் | 3,644 | 104.93 |
| பொலநறுவை | 2,796 | 88.46 |
| முல்லைத்தீவு | 7,424 | 78.63 |
| மாகோ | 6,750 | 69.68 |
| பதுளை | 3,696 | 69.65 |
| யாழ்ப்பாணம் | 11,251 | 59.84 |
| திருகோணமலை | 3,738 | 57.07 |
| மாத்தளை | 4,721 | 53.36 |
| குருநாகல் | 6,309 | 46.51 |
| கிளிநொச்சி | 4,448 | 43.21 |
| மனம்பிட்டிய | 1,014 | 35.50 |
| தம்புத்தேகம | 1,451 | 19.58 |
| புத்தளம் | 790 | 12.62 |
| கண்டி | 1,302 | 8.75 |
| மாத்தறை | 1,215 | 7.01 |
| தெஹியத்தகண்டிய | 356 | 6.59 |
| கேகாலை | 931 | 5.84 |
| காலி | 1,312 | 5.02 |
| அம்பாந்தோட்டை | 242 | 5.00 |
| கம்பஹா | 229 | 1.50 |
| களுத்துறை | 43 | 0.89 |

| | | |
|---|---|---|
| இரத்தினபுரி | 84 | 0.42 |
| நுவரேலியா | 33 | 0.21 |
| கொழும்பு | 5 | 0.08 |


மூலம்: விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதி சபை

### 2.5.5 விவசாயிகளுக்கான சமூகப் பாதுகாப்பு

#### *2.5.5.1 சமூகப் பாதுகாப்பு முறைமை என்ற வகையில் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்*


தமது இளமைக் காலத்தை நாட்டின் விவசாய அபிவிருத்திக்காகப் பயன்படுத்திய வயது முதிர்ந்த விவசாயிகளுக்கான பாதுகாப்பு வழங்குவதற்கு விவசாயிகள் ஓய்வூதியத் திட்டமொன்று விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் (Agriculture and Agrarian Insurance Board- AAIB) தாபிக்கப்பட்டது. விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 959,254 விவசாயிகள் பதிவு செய்துள்ளதுடன் 2018 இன்போது இத்திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு தகைமை பெற்ற 155,339 விவசாயிகளுக்கிடையில் ரூபா 2,813 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. விவசாயிகள் பங்களிப்புத் திட்டமானது சுயதேவையினைப் பூர்த்தி செய்வதற்கு போதியதாகக் காணப்படாததனால் ஒரே தடவையில் ஓய்வூதியத்தினை வழங்குவதற்காக விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு ஏறக்குறைய ரூபா 220 மில்லியனை திறைசேரி வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக பங்களிப்பு ஓய்வூதியத்திட்டமானது மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் செயற்படுத்தப்பட்டதுடன் 69,049 மீனவர்கள் இத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் மாதாந்த ஓய்வூதியமாக 4,420 மீனவர்களுக்கு ஏறக்குறைய ரூபா 63 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்டமானது திறைசேரிக்கு எவ்வித மேலதிகச் செலவினமும் இல்லாது தன்னிறைவு பெற்றுள்ளது.

**வரைபு 2.7 விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் செயலாற்றுகை (2018)**




மூலம் விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை

வரைபு 7.8 மீனவர் ஓய்வூதியத் திட்டதின் செயலாற்றுகை




மூலம் விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை

## 2.6 பெருந்தோட்டத்துறைக்கான உதவி

### 2.6.1 சிறிய நில உடமை பெருந்தோட்டத்துறைக்கான உதவி

பெருந்தோட்டத்துறையானது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருவதில் மிகப் பிரதான பங்கினை வகிப்பதுடன் சுதந்திரத்தின் பின்னர் அதிகாரத்திற்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் பல்வேறு நிதிசார் மற்றும் நிதிசாரா ஒத்துழைப்புத் திட்டங்களை செயற்படுத்தியதன் மூலம் பெருந்தோட்டத்துறைக்கு வசதியளிப்பதற்கு தமது ஆகக்கூடிய முயற்சியினை எடுத்துள்ளன. தற்பொழுது, பெருந்தோட்டத் தொழிற்துறையில் 75 சதவீதத்திற்கு அதிகமான பங்களிப்பபை வழங்குகின்ற சிறு உடமைநில பெருந்தோட்டத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 2018 இல், சிறுஉடமை நில உரிமையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மேலதிக ஊக்குவிப்பு மற்றும் நன்மைகளை வழங்கியதன் ஊடாக ஒத்துழைப்பு நிகழ்ச்சி திட்டங்கள் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

**அட்டவனை 2.13 : சிறிய பெருந்தோட்டத்துறை உரிமையாளர்களின் செயலாற்றுகை 2011 – 2018**

| ஆண்டு | தேயிலை | | இறப்பர் | | தெங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பளவு (ஹெக்) | மொத்த உற்பத்தி (கி.கி.மில்) | பரப்பளவு (ஹெக்) | மொத்த உற்பத்தி (கி.கி.மில்) | பரப்பளவு (ஹெக்) | மொத்த உற்பத்தி (கி.கி.மில்) |
| 2011 | 206,104 | 328 | 128,120 | 158 | 394,836 | 2,303 |
| 2012 | 203,020 | 328 | 130,780 | 152 | 394,836 | 2,411 |
| 2013 | 202,408 | 340 | 133,668 | 130 | 394,836 | 2,061 |
| 2014 | 202,800 | 338 | 134,137 | 99 | 394,836 | 2,890 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 202,800 | 329 | 134,906 | 89 | 394,836 | 3,027 |
| 2016 | 202,022 | 292 | 136,274 | 79 | 440,000 | 3,098 |
| 2017 | 202,540 | 308 | 136274 | 83 | 440,000 | 2,449 |
| 2018 | 201,137 | 309 | 136,875 | 83 | 455,430 | 2,623 |

மூலம் : பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், இலங்கை தேயிலைச் சபை.

பெருந்தோட்டத் தொழிற்துறையில் 75 சதவீதத்திற்கு அதிக பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள சிறு உடமைநில பெருந்தோட்டத்துறையானது, இத்துறையின் நிலையான தன்மையினைப் பாதிக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை தற்பொழுது எதிர்நோக்கி வருகின்றது. வயது முதிர்வு பயிர்ச்செய்கையானது சிறுஉடமை நிலங்களின் உற்பத்தி மற்றும் இலாபத்தினை நேரடியாகப் பாதிக்கின்ற பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகும். இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு தேயிலை மற்றும் இறப்பர் புதிய பயிர்ச்செய்கை மற்றும் மீள்நடுகை என்பவற்றுக்கு அரசாங்கத்தினால் ஊக்குவிப்புகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைவாக, ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூபா 500,000 மானியம் தேயிலை மீள் நடுகை மற்றும் புதிய நடுகைக்காக வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இறப்பர் மீள்நடுகை மற்றும் புதிய நடுகை என்பவற்றுக்கு முறையே ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூபா 175,000 மற்றும் 150,000 வழங்கப்பட்டது.

அரசாங்கம் மானிய கொடுப்பனவுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 662,000 மில்லியனைச் செலவிட்டுள்ளதுடன் ஏறக்குறைய 16,562 பயனாளர்கள் 2018 இல் இம்மானியத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

**அட்டவணை 2.14 : தேயிலை மற்றும் இறப்பர் சிறிய உரிமையாளர் துறைக்காக வழங்கப்பட்ட மீள் நடுகை மற்றும் புதிய நடுகை மானியங்களின் போக்கு**

**(ரூபா மில்.)**

| ஆண்டு | மீள் நடுகை மானியம் | | | | புதிய நடுகை மானியம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தேயிலை | | இறப்பர் | | தேயிலை | | இறப்பர் | |
| | பயனாளிகளின் எண். | மானிய தொகை | பயனாளிகளின் எண். | மானிய தொகை | பயனாளிகளின் எண். | மானிய தொகை | பயனரிகளின் எண். | மானிய தொகை |
| 2013 | 30,955 | 351.87 | 2,622 | 171.31 | 3,759 | 42.41 | 2,938 | 167.73 |
| 2014 | 16,555 | 258.09 | 2,004 | 219.07 | 3,381 | 66.98 | 2,247 | 213.47 |
| 2015 | 17,252 | 420.07 | 852 | 173.36 | 4,732 | 128.12 | 1,076 | 189.83 |
| 2016 | 24,995 | 531.89 | 668 | 337.51 | 3,759 | 46.73 | 942 | 179.9 |
| 2017 | 20,271 | 464.33 | 1,165 | 346.81 | 3,416 | 60.23 | 657 | 173.64 |
| 2018 | 9,254 | 287.3 | 1114 | 205.46 | 5,499 | 58.79 | 695 | 110.55 |

மூலம்: பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

தேயிலைத்துறையானது இலங்கையின் பொருளாதாரத்தில் மிகக் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்குவதுடன் இலங்கையின் மொத்த ஊழியப்படையில் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட வாழ்வாதாரத்தினை வழங்குகின்றதுடன் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதி வருமானத்தினைப் பெற்றுத்தருகின்றது. இத்துறையானது தற்பொழுது ஊழியப் பற்றாக்குறை, தேயிலைச்செடிகளின் வயது அதிகரிப்பு மற்றும் மீள் நடுகையில் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகள், காலநிலை மாற்றங்கள், சிறந்த தர விதைகள் கிடைக்காமை மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளின் செய்கை பண்ணப்பட்ட பரப்பு குறைவடைகின்றமை போன்ற

பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. இந்த மோசமான சவால்களைக் கருத்திற்கொண்டு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி இரண்டினையும் வழங்குவதன் மூலம் தேயிலைத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆரம்பத்தில் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக குறைந்த வட்டி வீதத்துடன் கடன் வசதியொன்றினை தெரிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கிகளினூடாக அறிமுகப்படுத்தியுள்ளதுடன், தேயிலை நாற்று மேடைகளில் முதலீடு, மீள் நடுகை, தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றுக்காகவும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல், காலநிலை மாற்ற தணிப்பு மற்றும் தாணிய பல்வகைத் தன்மை என்பவற்றுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

### 2.6.2 பதிவு செய்த தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு வேலை மூலதனக் கடன் திட்டம்


தமது வேலை மூலதனத் தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் 2015 இல் விசேட கடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. அரச மற்றும் தனியார் வர்த்தக வங்கிகளின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் விசேட கடன் திட்டமொன்று இலங்கைத் தேயிலைச் சபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கடன் திட்டத்திற்கான வட்டி வீதம் வருடமொன்றுக்கு 6 சதவீதமாகக் காணப்பட்டதுடன் திறைசேரியானது பங்களிப்பு நிதி நிறுவனங்களுக்கு மானியமாக 2 சதவீதத்தினை வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 222 தொழிற்பாட்டு மூலதனக் கடன்கள் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய கடன்களின் மொத்தப் பெறுமதி ஏறக்குறைய ரூபா 7,025 மில்லியனாகும். 2018 இன்போது இக்கடன் திட்டத்திற்கான வட்டி மானியமாக ஏறக்குறைய ரூபா 24 மில்லியனை அரசாங்கம் பங்களிப்பு நிதி நிறுவனங்களுக்கு மீளளிப்புச் செய்துள்ளது.

## 2.7 உணவுப் பாதுகாப்பு

### 2.7.1 அரசாங்கத்தின் நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்

உர மானியம், தரமான விதை நெல்லினை மானிய விலையில் வழங்குதல் மற்றும் நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலையினை உறுதிப்படுத்தல் போன்ற பல்வேறு ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் கடந்த தசாப்தங்களின் போது நெல் துறைக்கு அரசாங்கம் வசதியேற்பாடு செய்துள்ளது. அதே போன்று உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் நெல் உற்பத்தி பிரதான பங்கினை வகிப்பதுடன் அரிசி நாட்டின் பிரதான உணவாகக் காணப்படுகின்றது. இதற்கமைவாக நாட்டில் நெல் உற்பத்தியானது கடந்த காலங்களின்போது அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் அடிக்கடியேற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் சில வருடங்களில் இப்போக்கானது தடைப்பட்டது. வருடாந்த நெல் உற்பத்தியானது 2017 இல் காணப்பட்ட உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 72 சதவீத அதிகரிப்பொன்றாக 2018 இல் 3.9 மில்லியன் மெற்றிக் தொன்னாக அதிகரித்தது.




மூலம் : தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

மேலே வரைபு 6.9 இல் வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைவாக 2018 இல் வருடாந்த நெல் உற்பத்தி தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் இது, 2000 இல் பதிவாகிய ஆகக்குறைந்த வருடாந்த நெல் உற்பத்தியாகக் காணப்பட்டதுடன் 2017 இல் காணப்பட்ட நெல் உற்பத்தியினைவிட

உயர்வாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 களில் நெல் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2018 இல் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டது. இதற்கான மிக முக்கிய காரணம் 2017/2018 பெரும் போகம் மற்றும் 2018 சிறுபோகத்தில் நாட்டில் நிலவிய பாதகமான காலநிலையினால் பாதிக்கப்பட்டதாகும். வருடாந்த நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 14 சதவீத ஈரழிப்பு தராதரத்திற்கு மேற்பட்ட அதிக ஈரழிப்புடன் கூட தனியார்துறை அரிசி ஆலைகளிலிருந்து நெற்செய்கைக்கான அதிகூடிய கேள்வி உருவானது. எனவே, 2018 நெல் விலையினை ஸ்திரப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீட்டிற்கான அவசியம் காணப்படவில்லை. எவ்வாறாயினும் நெல் சந்தைப்படுத்தல் சபையானது குறித்த வருடத்தில் நெல் விவசாயிகளிடமிருந்து 6,687 மெ.தொன் நெல்லினை கொள்வனவு செய்தது.

**அட்டவணை 2.15 அரசாங்கத்தின் நெல் கொள்வனவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு**

| பருவம் | நாடு (மெ.தொ.) | சம்பா (மெ.தொ) | மொத்தம் (மெ.தொ) | பெறுமதி (ரூபா மில்) |
|---|---|---|---|---|
| 2009/10 பெரும்போகம் | 63,850 | 6,919 | 70,769 | 1,995 |
| 2010 சிறுபோகம் | 83,819 | 27,910 | 111,729 | 3,184 |
| **மொத்தம்** | **147,669** | **34,829** | **182,498** | **5,179** |
| 2010/11 பெரும்போகம் | 2,913 | 556 | 3,469 | 98 |
| 2011 சிறுபோகம | 58,967 | 16,205 | 75,172 | 2,137 |
| **மொத்தம்** | **61,880** | **16,761** | **78,641** | **2,235** |
| 2011/12 பெரும்போகம் | 107,319 | 8,467 | 115,786 | 3,259 |
| 2012 சிறுபோகம் | 9,936 | 540 | 10,476 | 294 |
| **மொத்தம்** | **117,255** | **9,007** | **126,262** | **3,553** |
| 2012/13 பெரும்போகம் | 107,445 | 31,205 | 138,650 | 4,530 |
| 2013 சிறுபோகம் | 81,834 | 12,542 | 94,376 | 3,058 |
| **மொத்தம்** | **189,279** | **43,747** | **233,026** | **7,588** |
| 2013/14 பெரும்போகம் | 3971 | 592 | 4563 | 148 |
| 2014 சிறுபோகம் | 0 | 0 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| **மொத்தம்** | **3,971** | **592** | **4,563** | **148** |
| 2014/15 பெரும்போகம் | 126,203 | 34,366 | 160,569 | 7510 |
| 2015 சிறுபோகம் | 162,526 | 12,487 | 175,013 | 7,950 |
| **மொத்தம்** | **288,729** | **46,853** | **335,582** | **15,460** |
| 2015/16 பெரும்போகம் | 91,785 | 40,196 | 131,981 | 5,139 |
| 2016 சிறுபோகம் | 11,054 | 14,384 | 25,438 | 1,056 |
| **மொத்தம்** | **102,839** | **54,580** | **157,419** | **6,195** |
| 2016/17 பெரும்போகம் | **0** | **0** | **0** | **0** |
| 2017 சிறுபோகம் | **0** | **0** | **0** | **0** |
| **மொத்தம்** | **0** | **0** | **0** | **0** |
| 2017/18 பெரும்போகம் | 4,605 | **0** | 4,605 | 175 |
| 2018 சிறுபோகம் | 2,077 | 5 | 2,082 | 79 |
| **மொத்தம்** | **6,682** | **5** | **6,687** | **254** |
| **முழு மொத்தம்** | **918,304** | **206,374** | **1,124,678** | **40,612** |

*மூலம் : நெல் சந்தைப்படுத்தல் சபை*

### 2.7.2 2018 இன்போது நெல் கொள்வனவில் தனியார்துறை தலையீடு

நெல் அறுவடையில் வீழ்ச்சியானது அரசாங்க உத்தரவாத விலையினை விட உயர் விலையினை நெல் விவசாயிகளுக்கு வழங்குவதில் தனியார்துறை கொள்வனவாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக நெல் கொள்வனவுக்கான அரசாங்கத்தின் தலையீடு அவசியப்படவில்லை. நெல் கொள்வனவுக்கான அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளினூடாக தனியார் துறையினால் பெறப்பட்ட வங்கி நிதியளிப்பு பிரதான நிதி மூலமாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நெல் கொள்வனவுக்காக வங்கிகளினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த தொகை என்பன குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளன. மேலும் மூன்று பிரதான அரசாங்க வங்கிகளைத் தவிர தனிப்பட்ட வங்கிகள் முக்கிய கவனம் எடுத்ததுடன் இலங்கை வங்கியானது கடன் எண்ணிக்கை மற்றும் தொகையினை அதிகரித்த அதேவேளை மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் என்பன தொகை மற்றும் எண்ணிக்கை இரண்டிலும் வீழ்ச்சியினைப் பதிவாக்கின. தனியார் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கிடையில் மொத்தமாக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 2017 உடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் அதிகரிப்பினைக் காட்டியது. மேலும் வர்த்தக வங்கி மற்றும் சம்பத் வங்கி ஆகிய இரண்டும் 2017 உடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையினை அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும் டி.எவ்.சீ.சீ வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கி ஆகியன நெல் கொள்வனவுக்காக இவ்வருடனத்தில் எவ்வித கடனையும வழங்கவில்லை.

**அட்டவணை 2.16 நெல் கொள்வனவுக்காக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் ஒப்பீடு**

(ரூ.மில்.)

| வங்கி | 2017-18 பெரும்போகம் | | 2018 சிறுபோகம் | | மொத்தம் (2018) | | மொத்தம் (2017) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் எண். | மொத்தகடன் தொகை | கடன் எண். | மொத்தகடன் தொகை | கடன் எண். | மொத்தகடன் தொகை | கடன் எண். | மொத்தகடன் தொகை |
| மக்கள் வங்கி | 81 | 714 | 14 | 443 | 95 | 1,157 | 212 | 7,100 |
| இலங்கை வங்கி | 336 | 13,036 | 194 | 13,985 | 530 | 27,021 | 460 | 19,997 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | 55 | 246 | 41 | 137 | 96 | 383 | 140 | 584 |
| **அரச வங்கிகளுக்கான மொத்தம்** | **472** | **13,996** | **249** | **14,565** | **721** | **28,561** | **812** | **27,681** |
| கொமர்ஷல் வங்கி | 465 | 1,878 | 561 | 1,992 | 1026 | 3,870 | 442 | 1,622 |
| சம்பத் வங்கி | 76 | 1,292 | 49 | 770 | 125 | 2,062 | 89 | 1,634 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| டி.எவ.சி.சி. வங்கி | 55 | 1,325 | 37 | 1,158 | 92 | 2,483 | 36 | 2,496 |
| செலான் வங்கி | 46 | 262 | 40 | 820 | 86 | 1,082 | 147 | 879 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 3 | 315 | 3 | 414 | 6 | 729 | 25 | 944 |
| ஹட்டன்நெஷனல் வங்கி | 176 | 1,346 | 132 | 1,477 | 308 | 2,823 | 431 | 4,320 |
| பீப்பில்ஸ் லீஸிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. | 2 | 16 | 8 | 16 | 10 | 32 | - | - |
| **தனியார் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் மொத்தம்** | **823** | **6,433** | **830** | **6,647** | **1653** | **13,080** | **1170** | **11,895** |
| **முழு மொத்தம்** | **1295** | **20,429** | **1079** | **21,212** | **2374** | **41,641** | **1,982** | **39,576** |

*மூலம் : சம்பந்தப்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்*

### 2.7.3 வாழ்க்கைச் செலவு

2017இல் நாட்டில் நிலவிய இயற்கைக் காலநிலை மாற்றம் மற்றும் வறட்சி நிலைமை என்பன 2018 இல் தொடர்ந்து காணப்பட்டதுடன் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவிலும் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியது. அனைத்து விவசாய உற்பத்திகளினதும் பயிர் அறுவடை பாதிக்கப்பட்டமையானது வரையறுக்கப்பட்ட உற்பத்திகளுக்கு உயர்ந்த கேள்வியினை ஏற்படுத்துகின்ற நிலையினை உருவாக்கியது. அதேவேளை தெற்கு மற்றும் கிழக்காசிய பொருளாதாரங்களில் பெரும்பாலானவை பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்குட்பட்டதன் விளைவாக இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பேற்பட்டது. இது 2017இன்போது உணவுப் பாதுகாப்பில் பாரிய நெருக்கடியினை ஏற்படுத்தியதுடன் இப்போக்கானது 2018 இலும் தொடர்ந்து காணப்பட்டது. 2017 இல் அரிசியின் உள்நாட்டுச் சந்தை உணவுப் பாதுகாப்பில் பிரதான பங்கினை வகித்ததுடன் மிக மோசமான பாதிப்பிற்குட்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், பருப்பு, கருவாடு, மிளகாய் மற்றும் ஏனைய தானியங்கள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. இதன் விளைவாக வாழ்க்கைச் செலவினை முறையாக முகாமை செய்யும் வகையில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மீதான வழங்கல், விலைகள் மற்றும் ஏற்புடைய வரிகள் தொடர்பாக அரசாங்கம் தொடர்ந்து கண்காணித்து வந்ததுடன் மீளாய்வும் செய்தது.

ஏற்றுக் கொள்ளத்தக்க ஆகக் குறைந்த வாழ்க்கைச் செலவு மட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் காலத்திற்கேற்ற தீர்மானத்தினை எடுப்பதற்காக தாபிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீதான வரிகள் நீக்கப்பட்டதுடன் விசேட நுகர்வுப்பொருள் அறவீடு நுகர்வோருக்கான சில்லறை விலையினை உறுதிப்படுத்துவதற்கு ஆகக்குறைந்த மட்டத்தில் பேணப்பட்டது. உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் அரிசி என்பவற்றின் இறக்குமதிமீது குறிப்பிடத்தக்களவு வரி குறைக்கப்பட்டதுடன் பண்டிகைக் காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட அதிகூடிய கேள்வியினைக் கருத்திற்கொண்டு 2018 ஏப்ரல் 30 ஆம் திகதிவரை எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்தும் பேணப்பட்டது.

வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கு 2017 இல் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட முக்கிய உணவுப பொருட்கள் 2018 ஏப்ரல் புத்தாண்டு பண்டிகை முடிவடையும் வரை தனியார்துறை சுப்பர் மாக்கட்டுகள் மற்றும் லங்கா சதொச என்பவற்றின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இது வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கையொன்றாகக் காணப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி, பருப்பு, சீனி, நெத்தலி, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு மற்றும் மக்கரல் ஆகிய உணவுப் பொருட்கள் நாடு முழுவதிலும் குறைந்த விலையில் நுகர்வோருக்கு கிடைக்கும்படி செய்யப்பட்டன. இச்செயன்முறையினால் தனியார்துறை சுப்ப மாக்கட்டுகள் மற்றும் லங்கா சதொச என்பவற்றினால் இழந்த நட்டத்தினை அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட விசேட அலகான "குடும்ப சிக்கன அலகு" மூலம் மீளளிப்புச் செய்வதற்கு அரசாங்கம் இணங்கியது.

#### 2.7.3.1 அரிசி இறக்குமதி

நாட்டில் என்றுமில்லாத வறட்சி நிலைமையினைத் தொடர்ந்து நெல் உற்பத்தியில் வீழ்ச்சியேற்பட்டதன் விளைவாக அரிசி சந்தை ஸ்திரமற்ற நிலையினை அடைந்தது. 2018 இலும் அரசியின் விலை உயர்வடைந்து காணப்பட்டதுடன் உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் நுகர்வு விலை நியாயமற்ற அளவு உயர்வாகக் காணப்பட்டது. வறட்சி நிலைமையானது தொடர்ந்து ஐந்து பயிர்ச்செய்கை காலப்பகுதியில் காணப்பட்டதுடன் சிறியளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் மூடப்பட்டதுடன் உள்நாட்டு பெரியளவு ஆலை உரிமையாளர்களின் சிறிய குழுவொன்றின் மூலம் உள்நாட்டு அரிசி சந்தையில் ஆதிக்கம் நிலவியதினால் நுகர்வோருக்கான அரிசி விலை அதிகரித்தது. இச்சூழ்நிலையில், உள்நாட்டு அரிசி உற்பத்தியில் மாத்திரம் தங்கியிருக்கும் நிலையினைத் தவிர்க்கும் வகையில் அரிசியினை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இதற்கமைவாக, தனியார் மற்றும் அரசதுறை இறக்குமதியாளர்கள் அரிசியினை மேலும் இறக்குமதி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டதுடன் அரிசியின் சில்லறை விலையினைக் குறைக்கும் நோக்கத்துடன் கிலோ கிராம் ஒன்றுக்கு விசேட நுகர்வுப்பொருள் அறவீடு ரூபா 0.25 ஆக மாத்திரம் விதித்ததன் மூலம் 2018 ஏப்ரல் 30 வரை வரி விதிப்பனவுகள் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டன. இதனால் 2018 ஆம் வருடத்தின்போது மொத்த அரிசி இறக்குமதி 250,139 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்டது.

## 2.8 கால்நடைத் துறை அபிவிருத்தி

### 2.8.1 பால் உற்பத்தித்துறை

பால் உற்பத்தித் தொழிற் துறையானது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆற்றலினைக் கொண்டுள்ளதுடன் இலங்கையில் மிக முக்கியமான தொழில்துறைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. பால் என்பது மிகவும் போஷாக்கு நிறைந்த திரவ உணவொன்று என்பதுடன் மிகவும் சுவையான பாணம் ஒன்றாகும். கிராமியக் குடும்பங்களின் வேலையின்மை மற்றும் வறுமை மட்டத்தினைக் குறைப்பதற்கு உதவுகின்ற அதேவேளை போஷாக்கின்மையினைக் குறைத்து போஷனை மட்டத்தினை அதிகரிப்பதற்கு மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது.

இலங்கையில், பெரும்பாலான பாற்பண்ணையாளர்கள் பால் உற்பத்திக் கைத்தொழிலில் மேலதிக வருமானம் தரும் மூலமொன்றாக ஈடுபட்டுள்ளதுடன் இத்தொழிற்துறையானது சிறியளவில் இடம் பெறுகின்றது. இதன் விளைவாக, 2018 இல் உள்நாட்டு பால் உற்பத்தியானது சிறியதொரு விகிதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 இல் மொத்தப் பால் உற்பத்தி 472 மில்லியன் லீற்றர்களாகக் காணப்பட்டதுடன் கரவைப் பசுக்களினால் வழங்கப்பட்ட 385 மில்லியன் லீற்றராகக் காணப்பட்ட முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

தற்பொழுது, இலங்கை பால் உற்பத்தியில் உள்நாட்டு மூலங்களைக் கொண்டு ஏறக்குறைய 45 சதவீதமான சுய தேவை பூர்த்தியடைந்துள்ளதுடன் மொத்த உள்நாட்டுத் தேவையினை நிறைவு செய்வதற்கு பால் உற்பத்தியின் ஏறக்குறைய 55 சதவீதத்தினை இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இப்பின்னனியில், அரசாங்கம் நாட்டில் பால் உற்பத்தி தொழிற்துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு கொள்கை நடைமுறைகளை காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் பால் இறக்குமதிக்கான வெளிநாட்டு செலாவணியினை சேமிப்பதற்கும் குறைந்த விலையில் உள்நாட்டுச் சந்தையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் கிடைப்பனவினை அதிகரிப்பதற்கும் கடந்த காலங்களில் வர்த்தக ரீதியான பால் உற்பத்தயினை ஊக்குவித்தல், பசும்பால் விலையிடல் மற்றும் வர்த்தகம் மற்றும் தீர்வைகள் தொடர்பான கொள்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

உள்நாட்டு பால்மா உற்பத்தியினை ஊக்குவிப்பதுடன் நுகர்வோருக்கான விலை நிவாரணமொன்றினை வழங்கும் நோக்கத்துடன் உள்நாட்டுப் பால்மா தயாரிப்பு கம்பனிகளுக்கான விலை மானியம் 2018 இல் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. இதற்கமைவாக 2018 இல் உள்நாட்டுப் பால் உற்பத்திக் கம்பனிகளான மில்கோ (தனியார்) கம்பனி மற்றும் பெல்வத்த பால் உற்பத்திக் கைத்தொழில் கம்பனி ஆகியன உத்தேசிக்கப்பட்டவாறு 400 கிராம் மற்றும் 1 கிலோ பால் மா பக்கட்டுக்களின் விலைகளை குறைத்ததுடன் பின்வருமாறு மீளளிப்புச் செய்தது.

**அட்டவணை 2.17 2018 இல் உள்ளூர் பால்மா உற்பத்தியாளர்களுக்கு விலை மானியம் வழங்கல்**


| கம்பனி | அலகு | சந்தை விலை (ரூபா) | வ.செ.தி.இனை அடிப்படையாகக் கொண்ட விற்வனை விலை (ரூபா) | விலை மானியம் (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| மில்கோ பிரைவேட் லிமிடெட் | 400 g | 320 | 295 | 186 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 கிகி | 790 | 735 | 90 |
| பெல்வத்த பாற்பண்ணை கைத்தொழில் கம்பனி லிமிடெட் | 400 கி | 325 | 295 | 138 |
| | 1 கிகி | 810 | 735 | 73 |

மூலம்: அபிவிருத்தி நிதி திணைக்களம்

மேற்குறித்த அட்டவணையில் காட்டப்பட்டவாறு 2018 இல் உள்நாட்டுப் பால் மா உற்பத்தியாளர்களுக்கான விலை மானியத்தினைச் செலுத்துவதற்கு ரூபா 487 மில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது. 2018.06.19 ஆம் திகதி இடம்பெற்ற வாழ்க்கைச் செலவுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இறக்குமதி செய்யப்பட்ட பால் மா மற்றும் உள்நாட்டுப் பால் மா இரண்டினதும் விலைகளை எவ்வித விலை மானியமும் வழங்காது ஒரே விலையினை பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

உள்நாட்டுப் பால் மாவுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட பால் உள்நாட்டு பால் உற்பத்தித் தேவையில் ஏறக்குறைய 55 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்ற வகையில் நாட்டின் பால் உற்பத்தித் துறையில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. உள்நாட்டுக் கேள்வியினை நிவர்த்தி செய்வதற்கு நாட்டுக்கு இறக்குமதி செய்யவேண்டிய பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் அளவு ஏறக்குறைய 84,000 மெற்றிக் தொன்களாகும். உள்நாட்டு பால் நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்தினால் பால் மா மீது ஆகக்கூடிய சில்லறை விலை விதிக்கப்பட்டதுடன் பால் இறக்குமதியாளர்கள் உலக விலை மாற்றங்களுக்கேற்ப உள்நாட்டுப் பால் மா விலைகளைத் திருத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. சர்வதேச சந்தை விலைகளின் நெகிழ்வினை கருத்திற்கொண்டு உள்நாட்டுப் பால் மா இறக்குமதியாளர்களுக்கு தீர்வை விலக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைவாக பால் மா மீதான ஏற்புடைய தீர்வை பால் இறக்குமதியாளர்களின் வேண்டுகோளுக்கேற்ப 2018 இல் பல்வேறு திருத்தங்கள் இடம் பெற்றுள்ளதுடன் இறுதித் திருத்தமானது 2018 ஒக்டோபரில் இடம்பெற்றது.




மூலம் உலக பாற்பொருள் வர்த்தகம்

## 2.8.2 கோழி வளர்ப்புத் துறை

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மறுசீரமைப்புடன் 1977க்குப் பின்னர் கோழி வளர்ப்புத் துறையானது குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஒன்றினைக் காட்டியது. 1980 இலிருந்து கோழிகளின் எண்ணிக்கை 2018 இல் 6.3 மில்லியனிலிருந்து 40.6 மில்லியனாக வளர்ச்சியடைந்தது. இதற்கமைவாக நடைமுறையில் தலைக்குரிய கோழி நுகர்வு 9.9 கிலோ கிராமாக காணப்பட்டதுடன் முட்டை நுகர்வுக்கான நடைமுறை தலைக்குரிய நுகர்வு 135.7 முட்டைகளாகும்.

**அட்டவணை 2.18 கோழி மற்றும் முட்டை உள்ளூர் உற்பத்தி விபரம்**

| ஆண்டு | கோழி இறைச்சி உற்பத்தி | | முட்டை உற்பத்தி எண். | |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட (000“ மெ.தொ.) | மெய் (000“ மெ.தொ.) | மதிப்பிடப்பட்ட (மில்.) | மெய் (மில்.) |
| 2010 | த.இ | 104.16 | த.இ | 1,385 |
| 2011 | த.இ | 116.76 | த.இ | 1,711 |
| 2012 | த.இ | 137.39 | த.இ | 2,279 |
| 2013 | த.இ | 144.54 | த.இ | 2,075 |
| 2014 | 162.5 | 150.32 | 2,086 | 2,232 |
| 2015 | 152 | 164.45 | 2,203 | 2,294 |
| 2016 | 168.41 | 182.69 | 2,187 | 2,304 |
| 2017 | 189.02 | 200.98 | 2,739 | 2,856 |
| 2018 | 184.09 | 214.2 | 2,992 | 2,853 |

மூலம்: கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

கோழி வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்காக தரமான மிருக உணவு ஏற்பாடு இன்றியமையாத காரணியொன்றாகும். விலங்குணவுக்கான மிகப் பிரதான மூலப்பொருள் சோளமாகும். சோளம் பயிரிடுவதற்கு உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் தன்னிறைவடையும் நோக்கத்துடன் அரசாங்கம் பல்வேறு கருத்திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் கடந்த வருடங்களிலும் ஏனைய பருவ காலங்களிலும் நாட்டில் காணப்பட்ட வறட்சியினைக் குறைப்பதற்கு இலக்கினை அடைய முடியாமல் போனது. வறட்சி நிலைமை 2018 இல் இல்லாதாக்கப்பட்டதுடன் 2017/2018 பெரும் போகத்தின்போது 63,926 ஹெக்டேயரில் சோளம் செய்கை பண்ணப்பட்டு 2018 சிறுபோகத்தில் 6,969 ஹெக்டேயர் 27,106 மெற்றிக் தொன் சோளம் உற்பத்தி செய்யப்பட்டது.

**அட்டவணை 2.19 சோளச் செய்கை**

| ஆண்டு | பெரும்போகம் | | சிறுபோகம் | |
|---|---|---|---|---|
| | பரப்பு (ஹெக்) | உற்பத்தி (மெ.தொ.) | பரப்பு (ஹெக்) | உற்பத்தி (மெ.தொ) |
| 2015 | 60,954 | 230,871 | 9,017 | 30,244 |
| 2016 | 57,094 | 207,075 | 10,536 | 36,885 |
| 2017 | 44,515 | 163,733 | 8,029 | 32,011 |
| 2018 | 63,926 | 242,935 | 6,969 | 27,106 |

மூலம்: தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

எவ்வாறாயினும், உள்நாட்டு சோள உற்பத்தியானது கோழி வளர்ப்புக் கைத்தொழிலுக்கான வருடாந்த சோள தேவையினை ஈடு செய்வதற்கு போதியதாக இல்லாததனால் பற்றாக்குறையான சோளம் இறக்குமதி செய்யப்படும். எனவே, கோழி வளர்ப்புத் தொழில்துறைக்கான சோள இறக்குமதியினை கி.கி. ஒன்றுக்கு விசேட நுகர்வுப் பொருள் அறவீடு 10 ரூபா சலுகை வீதமொன்றின் கீழ் உணவு

ஆலை உரிமையாளர்களுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினை அரசாங்கம் வழங்கியது. இதற்கமைவாக சலுகை வீதத்தின் கீழ் ரூபா 4,937 மில்லியன் செலவில் 2018 இன்போது இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் மொத்த அளவு 119,087 மெற்றிக் தொன்களாகும். கோழி வளர்ப்புத் துறைக்கான நிலையான விலையொன்றில் சோளத்தினைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் சந்தையில் நியாயமான விலையில் கோழி உற்பத்திகளை பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோருக்கு முடியுமாக இருக்கும்.

**அட்டவணை 2.20 சோள இறக்குமதி**

| ஆண்டு | அளவு (மெ.தொ) | பெறுமதி (000“ ரூ.மில்.) |
|---|---|---|
| 2015 | 67,237 | 2,348 |
| 2016 | 41,946 | 1,572 |
| 2017 | 179,589 | 6,628 |
| 2018 | 119,087 | 4,937 |

மூலம்: புள்ளிவிபரவியல் பிரிவு, இலங்கைச் சுங்கம்

## 6.9 இலக்கிடப்பட்ட குழுக்களிற்கான விசேட ஊக்குவிப்புகள்

### 6.9.1 சமூக ரீதியில் மீள் ஒருங்கிணைக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுய தொழில் கடன் திட்டம்

சமூகரீதியில் மீள் ஒருங்கிணைக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் கடன் திட்டமானது மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னர் சரணடைந்த அல்லது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி பயிலுநர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி என்பவற்றின் ஊடாக 2012 யூலையிலிருந்து செயற்படுத்தப்பட்டது.

இக்கடன் திட்டமானது, சமூகரீதியல் மீள் ஒருங்கிணைக்கப்பட்ட இளைஞர்கள் தமது வாழ்வாதார செயற்பாடுகளை வெற்றிகரமாக ஆரம்பிப்பதற்கான சிறந்த வாய்ப்பினை வழங்குகின்றது. இந்த இளைஞர்கள் தொழிற் பயிற்சி அபிவிருத்தி பயிற்சி நெறிகளில் ஈடுபடுவதற்கும் தமது சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் பின் மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தமது வாழ்வாதாரத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குமான பொருளாதார சூழலினைப்பெற்று சிறந்த பிரசைகளாக இப்பயிலுநர்களை மாற்றுவதற்கான வலுவான அடித்தளத்தினையும் இக்கடன் திட்டம் வழங்குகின்றது. விவசாய அபிவிருத்தி மற்றும் பாற் பண்ணைச் செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகளுக்கான விரிவாக்கட் சேவைகள், விலங்கு வேளாண்மை என்பவற்றுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்தித்திறன் தொழில்முயற்சி உபகரணம், உள்நாட்டுக் கைத்தொழில்கள், கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் சிறிய வியாபார நடவடிக்கைகள், ஆரம்ப இரண்டாம் நிலை/ உயர் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆகிய தேவைகளுக்காக ஆகக்கூடியது ஒரு வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக ஆகக்கூடியது 10 வருட மீள் கொடுப்பனவுக் காலத்துடன் ஆகக் கூடியது ரூபா 250,000 வரைக்கும் புனர்வாழ்வு பெற்றவர்கள் கடன் பெறுவதற்குத் தகைமை பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் கட்டம்-1 2014 இல் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி என்பவற்றின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 1,799 பயனாளர்களுக்கு ரூபா 302 மில்லியன் சலுகைக் கடன் வசதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கட்டம்-11 ஆனது 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் கீழ் ரூபா 525 மில்லியனை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2018.12.31 அன்றுள்ளவாறு இக்கடன் திட்டத்தின் கட்டம்-11 இனது முன்னேற்றம் பின்வருமாறு:

**அட்டவணை 2.21 சமூக ரீதியாக மீள் ஒருங்கிணைக்கப்பட்ட பயிலுநர் கடன் திட்டத்தின் போக்கு – 2018.12.31 அன்றுள்ளவாறு.**

**(ரூபா. மில்)**

| மாவட்டம் | கடன்களின் எண். | கடன் பெறுமதி |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 86 | 20.1 |
| கிளிநொச்சி | 24 | 5.7 |
| முல்லைத்தீவு | 42 | 9.35 |
| மன்னார் | 16 | 2.78 |
| அம்பாறை | 2 | 0.35 |
| திருகோணமலை | 13 | 2.75 |
| மட்டக்களப்பு | 3 | 0.6 |
| **முழு மொத்தம்** | **186** | **41.63** |

*மூலம்: புனர்வாழ்வு அதிகார சபை*

கடன் பகிர்வு பிரதேச அடிப்படையில் 2018 இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 186 பயனாளிகள் கடன் பெற்றுள்ளனர். ஆகக்கூடிய கடன் பகிர்வு யாழ் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் அதன் மூலம் 86 பயிலுநர்கள் நன்மையடைந்துள்ளனர். 2018 டிசம்பரில் அரசாங்கம் வட்டி மானியமாக பங்களிப்பு நிதி நிறுவனங்களுக்கு ரூபா 11 மில்லியனைச் செலுத்தியுள்ளது.

# 3. நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

## 3.1 நிருவாகப்பிரிவு

அபிவிருத்தி நிதித் திணைக்களமானது பணிப்பாளர் நாயகத்தின் கீழ் செயற்படுவதுடன் அது 14 பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் 27 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக மொத்தமாக 34 அலுவலர்களை கொண்டுள்ளது. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 46 ஆகும். 2018ஆம் ஆண்டின் இறுதியில் 05 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. 2018ஆம் ஆண்டின் நிர்வாகம், நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய தகவல்ளை பின்வருமாறு காட்டலாம்.

### 3.1.1 ஆளணித் தொகுதி

அட்டவணை 3.1 : 2017.12.31ஆம் திகதிக்கு ஆளணித் தொகுதி

| | பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | தற்போது இருக்கும் பதவிகள் |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 03 | பணிப்பாளர் | 05 | 04 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 10 | 06 |
| 05 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் - இ.தி.சே. (மிகை ஊழியர் அடிப்படையில்) | 01 | 01 |
| 06 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 | 01 |
| 07 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 02 |
| 08 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 |
| 09 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 11 | 06 |
| 10 | முகாமைத்துவ உதவியாளர் | 01 | 01 |
| 11 | சாரதி | 06 | 06 |
| 12 | காரியாலய தொழில் உதவியாளர் | 06 | 05 |
| **மொத்தம்** | | **46** | **41** |

**புதிதாக 2018ல் திணைக்களத்தில் இணைந்தோர்**

1. திருமதி எச்.ஏ.ரி.எரந்தி - உதவிப் பணிப்பாளர்
2. செல்வி. எச்.எல்.எம்.பிரனான்ந்து - பொது முகாமைத்துவ உதவியாளர்
3. திருமதி பி.எல்.ரி.என்.லியனகே - பொது முகாமைத்துவ உதவியாளர்
4. திருமதி. ஏ.வீரரத்ன - பொது முகாமைத்துவ உதவியாளர்
5. திரு. பீ.டபிளியு.உதயகுமார - பொது முகாமைத்துவ உதவியாளர்
6. திருமதி பி.கே.டி.எஸ்.பிரபாஷினி - பொது முகாமைத்துவ உதவியாளர்
7. செல்வி டபிளியு.எல்.எம்.சந்திரகுமார - பொது முகாமைத்துவ உதவியாளர்
8. செல்வி பி.டி.பி.எம்.திசாநாயக்க - பொது முகாமைத்துவ உதவியாளர்
9. செல்வி பி.என்.எம்.ஜயசுந்தர - பொது முகாமைத்துவ உதவியாளர்
10. திரு கே.டி.கீர்த்திரத்ன - சாரதி
11. திரு டி.எச்.ஆர்.எஸ்.குமார - சாரதி
12. கே.ஏ.என்.என்.கொடிகார - சாரதி
13. திரு பி.வீ.என்.ரொஷான்த - காரியாலய தொழில் உதவியாளர்

**2017ல் திணைக்களத்தில் இருந்து இடமாற்றலாகிச் சென்றோர்**

1. திருமதி. ரி.ஹேவாவசம் - பொது முகாமைத்துவ உதவியாளர்
2. திரு. திரு பி.டபிளியு.உதயகுமார - பொது முகாமைத்துவ உதவியாளர்
3. செல்வி டபிளியு.எல்.எம்.சந்திரகுமார - பொது முகாமைத்துவ உதவியாளர்
4. திரு எம்.ஜே.பி.குணவர்தன - சாரதி
5. திரு எஸ்.ஏ.கீர்த்திசேன - சாரதி
6. திரு. ஜே.எம்.டி.ஜே.எஸ்.ஹேமந்த - காரியாலய தொழில் உதவியாளர்

### 3.1.2 பணியாளர்களின் தகவல்கள்

**அட்டவணை 3.2 : 2017.12.31 வரையிலான பணியாளர் தகவல்கள்**

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலை பேசி | தொலை நகல் | மின் அஞ்சல் |
| திரு. ஏ.எம்.பீ.எம்.பீ. அத்தபத்து | பணிப்பாளர் நாயகம் | 2484542 | 2394908 | dgdf@dfd.treasury.gov.lk<br>atapattu.ampmb@dfd.treasury.gov.lk |
| திரு. கே.ஏ.எஸ்.எஸ்.கே. பெரேரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2151416 | 2484955 | perera.kassk@dfd.treasury.gov.lk |
| திரு. கே.ஜி.பீ. புஷ்பகுமார | பணிப்பாளர் | 2484507 | 2484955 | kumara.kgpp@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம்.கே.டீ.என். மாதம்பே | பணிப்பாளர் | 2484605 | 2484955 | madampe.mkdn@dfd.treasury.gov.lk |
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி | பணிப்பாளர் | 2484572 | 2484955 | hettiarachchi.pmk@dfd.treasury.gov.lk |
| திரு. எஸ்.எச்.வீ. குமார | பணிப்பாளர் | 2484595 | 2484955 | kumara.shv@dfd.treasury.gov.lk |
| திருமதி. டப்ளியூ.எல்.எம்.ஏ. லியனகே | உதவிப் பணிப்பாளர் | 2484594 | 2484955 | liyanage.wlma@dfd.treasury.gov.lk<br>manorigl@yahoo.com |
| செல்வி. ஆர்.ஏ.டீ.ஆர். ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் | 2484596 | 2484955 | ranasinghe.radr@dfd.treasury.gov.lk<br>radranitha@gmail.com |
| செல்வி. பீ.ஜி.பீ. ரஸாஞ்சலி | உதவிப் பணிப்பாளர் | 2484829 | 2484955 | rasanjalie.pgp@dfd.treasury.gov.lk |
| செல்வி. ஜே.டீ. கொடின்கடுவ | உதவிப் பணிப்பாளர் | 2484854 | 2484955 | kotinkaduwa.jd@dfd.treasury.gov.lk<br>dilruksiko@gmail.com |
| திரு. டப்ளியூ.பீ.எஸ். விக்ரமகே | உதவிப் பணிப்பாளர் | 2151494 | 2484955 | wickramage.wps@dfd.treasury.gov.lk |
| திருமதி. டீ.டப்ளியூ. குமாரகுரு | உதவிப் பணிப்பாளர் | 2484501 | 2484955 | kumaraguru.dw@dfd.treasury.gov.lk |

| பெயர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசி | தொலைபேசி | தொலைபேசி |
| திருமதி எச்.ஏ.ரி.எரந்தி | உதவிப் பணிப்பாளர் | 2484501 | 2484955 | erandi.hat@dfd.tresuary.gov.lk |
| செல்வி. டீ.எல்.வி. விஜேரத்ன | உதவிப் பணிப்பாளர் | 2337527 | 2484955 | wijeratna.dlv@dfd.treasury.gov.lk |
| திரு. எச்.பீ.எஸ். சாந்த | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | shantha.hps@dfd.treasury.gov.lk |
| செல்வி ஏ.எம். விக்ரமசிங்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | wickremasinghe.am@dfd.treasury.gov.lk |
| செல்வி. பீ.எஸ்.என். பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2484884 | 2484955 | perera.psn@dfd.treasury.gov.lk |
| செல்வி ஜே.எம்.ஐ.ஏ. கீஷானி | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 2484884 | 2484955 | geeshani.jmia@dfd.treasury.gov.lk |
| திருமதி. எச்.ஏ.டீ.ஏ. நிலந்தி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | nilanthi.hada@dfd.treasury.gov.lk |
| திருமதி. எம்.ஜி.சி. கலாதேவி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | kaladevi.mgc@dfd.treasury.gov.lk |
| திரு. ஆர்.கே. லெனோரா | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | lenora.rk@dfd.treasury.gov.lk |
| திருமதி பி.ஏ.கே.எஸ்.பீ. ஜயவீர | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | jayaweera.baksp@dfd.treasury.gov.lk |
| செல்வி டி.பீ. சந்துனிக்கா | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | sandunika.dp@dfd.treasury.gov.lk |
| திரு பி.கே.டி.எஸ்.பிரபாஷினி | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | prabashini.pkds@ dfd.treasury.gov.lk |
| செல்வி எச்.எல்.எம்.பிரனாந்து | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | Fernando.hlm@dfd.treasury.gov.lk |
| திருமதி பி.எல்.ரி.என்.லியனகே | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | Liyanage.pltn@dfd.treasury.gov.lk |
| செல்வி பி.டி.பி.எம்.திசாநாயக்க | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | dissanayaka.pdpm@dfd.treasury.gov.lk |
| செல்வி பி.என்.எம்.ஜயசுந்தர | பொது முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | |
| திரு. எஸ்.ஜே.ஏ.கே.டீ. ரணசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | 2484862 | 2484955 | ranasinghe.sjakd@dfd.treasury.gov.lk |
| திரு. எம்.பி. குணவர்தன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. கே.டீ. கீர்த்திரத்ன | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே.எம்.ஏ.பீ. ஜயக்கொடி | சாரதி | 2484855 | 2484955 | - |
| திரு. எச்.ஏ.என். சாந்த | சாரதி | 2484862 | 2484955 | - |
| திரு. ஆர்.ஏ.டி.எம். ரணசிங்க | சாரதி | 2484862 | 2484955 | - |
| திரு டி.எச்.ஆர்.எஸ்.குமார | சாரதி | 2484862 | 2484955 | |
| கே.ஏ.என்.என்.கொடிகார | சாரதி | 2484862 | 2484955 | |
| திரு. திரு டி.வீ.எம்.ரொஷான்த | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. கே.சீ.யூ. பேமத்திலக | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஏ.ஏ.தாரிக் | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. ஜே.ஏ. எச்.சீ.கே. ஜயசிங்க | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |
| திரு. டி.ஈ.கே. பெலவத்தகே | காரியாலய தொழில் உதவியாளர் | 2484855 | 2484955 | - |

## 3.1.3 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விச் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள்

**அட்டவணை 3.4 : உள்ளூர் பயிற்சி பாடநெறிகள், ஆய்வுப் பயணங்கள் மற்றும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்**

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நடாத்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| திருமதி எம்.கே.டி.என்.மாதம்பே பணிப்பாளர் | பொதுக் கொள்வனவு மற்றும் ஒப்பந்தம் தொடர்பான டிப்ளோமா | 12.06.2017- 12.06.2018 | மிலோதா |
| செல்வி ஜே.டி.கொடின்கடுவ உதவிப் பணிப்பாளர் | பொதுக் கொள்வனவு மற்றும் ஒப்பந்தம் தொடர்பான டிப்ளோமா | 12.06.2017- 12.06.2018 | மிலோதா |
| செல்வி ஏ.எம்.விக்ரமசிங்க | திட்ட முகாமைத்துவம் தொடர்பான பாடநெறி | 26.02.2018 | மிலோதா |
| செல்வி பி.எஸ்.என்.பெரேரா | லிகிதர் திறன்விருத்தி பட்டறை | 12.06.2017- 14.06.2017 | திறன் அபிவிருத்தி நிறுவகம் |
| திருமதி பி.எல்.ரி.என்.லியனகே முகாமைத்துவ உதவியாளர் | பதவியணியினருக்கான ஆங்கில பாடநெறி | 20.08.2018 | மிலோதா |
| திருமதி எம்.ஜி.சி.கலாதேவி முகாமைத்துவ உதவியாளர் | சொத்துக்கள் பராமரிப்பு பற்றிய பாடநெறி | 26.02.2018 | நிபுனதா அபிவருத்தி நிறுவகம் |
| திருமதி பி.கே.டி.எஸ்.பிரபாஷினி முகாமைத்துவ உதவியாளர் | சுயவிபரக்கோவை பரீட்சித்தல் தொடர்பான பாடநெறி | 07.08.2018 | நிபுனதா அபிவருத்தி நிறுவகம் |
| திரு. திரு ஆர்.கே.லெனோரா முகாமைத்துவ உதவியாளர் | போக்குவரத்து முகாமைத்துவம் | 25.05.2018- 21.09.2018 | கட்டுமான தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| திரு எஸ்.ஜே.ஏ.கே.டி.ரனசிங்க முகாமைத்துவ உதவியாளர் | களஞ்சிய முகாமைத்தும் தொடர்பான ஆரம்ப பாடநெறி | 22.02.2018- 22.03.2018 | கட்டுமான தொழில் அபிவிருத்தி அதிகாரசபை |
| திருமதி பி.ஏ.கே.எஸ்.பி.ஜயவீர முகாமைத்துவ உதவியாளர் | பதவியணியினருக்கான ஆங்கில பாடநெறி | 20.08.2018 தொடக்கம் இன்றுவரை | மிலோதா |
| செல்வி பி.என்.எம்.ஜயசுந்தர | அலுவலக முறைமை முகாமைத்துவ பாடநெறி | 29.10.2018- 31.10.2018 | நிபுனதா அபிவிருத்தி நிறுவகம் |
| | திறணபிவிருத்தி தொடர்பான பாடநெறி | 05.07.2018- 13.07.2018 | |
| | ITMIS – உள்ளக கணக்காய்வு பயிற்சி | 27.11.2017 (ஒரு நாள்) | மிலோதா |
| | ITMIS – சொத்துக்கள் முகாமைத்துவ பயிற்சி | 29.11.2017- 30.11.2017 | மிலோதா |

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 3.1.4 வெளி நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்வி சுற்றுலாக்கள், மற்றும் மாநாடுகள்

அட்டவணை 3.4 : வெளி நாட்டு பயிற்சிப் பாடநெறிகள், ஆய்வுப் பயணம் மற்றும் கருத்தரங்குகள்

| அலுவலர்களின் பெயர்கள் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் காலப்பிரிவு | நாட்டின் பெயர் |
|---|---|---|---|
| திரு. பீ.எம்.கே. ஹெட்டியாரச்சி பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தி ஆலோசனை நிறுவனத்தினால் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலா | 2018.06.03-2018.07.08 | வியட்நாம் |
| திரு. கே.ஜி.பீ. புஷ்பகுமார பணிப்பாளர் | சோயாபீன் உற்பத்தி மற்றும் நடை முறைப்படுத்தல் தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் மேம்பாடு தொடர்பான மாநாடு | 2018.10.30-2018.11.19 | சீனா |
| செல்வி பி.ஜி.பி.ரசாஞ்சலி உதவிப் பணிப்பாளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி பற்றிய திறன் மேம்பாட்டுத் திட்டம் | 2018.07.18-2018.07.31 | இந்தோனேசியா |
| திருமதி எச்.ஏ.ரி.எரந்தி உதவிப் பணிப்பாளர் | ஆசிய நாடுகளின் வர்த்தக ஊக்குவிப்பு பற்றிய கருத்தரங்கு | 2018.11.01 | சீனா |
| திரு. எச்.பீ.எஸ்.சாந்த தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ஆசிய நாடுகளின் தகவல் தொடர்பாடல் தொடர்பான கருத்தரங்கு | 2018.09.10-2018.09.30 | சீனா |
| செல்வி பி.எஸ்.என்.பெரேரா அபிவிருத்தி உத்தியோகத்தர் | ஆசிய பசுபிக் நாடுகளின் ஆவணமற்ற வர்த்தகம் மற்றும் வலையமைப்பு ஊடாக வர்த்தக பரிமாற்றம் தொடர்பான கருத்தரங்கு | 2018.09.07-2018.09.27 | சீனா |
| செல்வி ஜே.எம்.ஐ.ஏ.கீஷானி தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | சோயாபீன் உற்பத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல் தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் மேம்பாடு தொடர்பான மாநாடு | 18.11.2017-17.12.2017 | சீனா |

## 3.2 நிதி தொடர்பான தகவல்கள்

திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு மீண்டுவரும் செலவினமாக 15,285,260,000 ரூபாவும் மூலதனச் செலவினமாக ரூபா. 870,010,000 வும் ஒதுக்கப்பட்டதுடன் மொத்தம் 14,415,250,000 ரூபா. 2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக செலவுத்தலைப்பு 243ன் கீழ்கருத்திட்டம் 1 மற்றும் கருத்திட்டம் 2ன்கீழ் ஒதுக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உண்மைச்செலவு 12,462,642,637 ரூபாவாகக் காணப்பட்டதோடு உண்மை மீண்டுவரும் செலவினங்களும் மூலதன செலவினங்களும் முறையே 618,523,474 ரூபாவும் 11,844,119,162 ரூபாவுமாகும். குறிப்பிட்ட ஆண்டில் செய்யப்பட்ட செலவு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.5 : வரவு செலவுத்திட்ட நிதி முடக்கம் - 2017

| செலவு விபரம் | மதிப்பீடு (ரூபா.) | உள்ள படி (ரூபா.) |
|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **5,608,078,050** | **4,770,946,489** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 26,400,000 | 26,122,408 |
| பிரயாணச் செலவுகள் | 4,150,000 | 3,959,058 |
| வழங்கல்கள் | 3,149,075 | 2,593,359 |
| பராமரிப்புச் செலவினம் | 3,154,410 | 2,935,490 |
| சேவைகள் | 20,432,000 | 18,807,687 |
| மாற்றல்கள் | | |
| **மூலதனச் செலவினம்** | **8,449,099,000** | **8,105,196,835** |
| மூலதனச் சொத்துக்களைப் பற்றுதல் | 2,620,000 | 2,277,552 |
| கொள் திறன் அபிவிருத்தி | 1,000,000 | 936,161 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினை மேம்படுத்தல் (ஜீடிஇஸட்) | 305,804,481 | 287,738,665 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் திட்டம் (ஆ.அ.வ.) | 7,640,479,000 | 7,498,406,525 |
| மூன்று களஞ்சியங்களின் நிர்மாணம் | 499,195,519 | 315,837,932 |
| **மொத்தம்** | **14,057,177,050** | **12,876,143,324** |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

அட்டவணை 3.6 : அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு பீ – 2017

| விபரம் | அனுமதி எல்லை | உண்மைத்தொகை |
|---|---|---|
| உச்சசெலவுஎல்லை | 3,500,000 | 2,669,746.80 |
| உச்சவரவு எல்லை | 850,000 | 1,784,712.43 |
| ஆகக்கூடிய கடன் எல்லை | 13,000,000 | 6,167,949.37 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

## 3.3 கணக்காய்வு ஐய வினாக்கள்

கணக்காய்வுத் திணைக்களமும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களமும் முன்வைத்த அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்ததோடு அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

| அட்டவணை 3.7 : கணக்காய்வு ஐய வினா - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் - 2017 | | |
|---|---|---|
| பெற்ற திகதி | விடயம் | பதில் அனுப்பிய திகதி |
| 2017.05.19 | 2016 வரவு செலவு திட்டத்தின் முன்மொழிவுகளுக்கமைய விலை குறைக்கப்பட்ட உள்நாட்டு பால்மா உற்பத்தியாளர்களுக்கான மானியம் வழங்கல் | 2017.06.16 |
| 2017.05.23 | ஒதுக்கீட்டுக்கணக்கு - 2016 | 2017.05.29 |
| 2017.06.13 | ஆளணியினர் ஆய்வு - 2016 | 2017.06.16 |
| 2017.07.12 | தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கு அமைய 2016ஆம் வருடத்திற்கான கணக்காய்வாளர் அறிக்கை | 2017.07.18 |
| 2017.07.12 | தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை | 2017.08.08 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

| அட்டவணை 3.8 : கணக்காய்வு வினா – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | | |
|---|---|---|
| பெற்ற திகதி | விடயம் | பதில் அனுப்பிய திகதி |
| 2017.01.09 | உள்ளக கணக்காய்வு அறிக்கை | 2017.01.27 |
| 2017.02.28 | 2016 நான்காம் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.03.31 |
| 2017.06.23 | 2017 முதல் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.07.04 |
| 2017.10.12 | 2017 வருடத்திற்கான மூன்றாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் | 2017.10.16 |
| 2017.10.20 | 2017 இரண்டாம் காலாண்டுக்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை | 2017.11.02 |

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்